இலஞ்சம் தவிர் நெஞ்சம் நிமிர்

களம் -20 வெற்றி -11

# நேர்மை நெறி

நவம்பர் 2021

(ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்)

(Reg.No.349/2001)

அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழும் இல

(NERMAI NERI)

Rs.10

## ஊழல் செய்வதும் செய்யத் தூண்டுவதும் தேசத்துரோகமே



## ஊழல் = சாபம்

PUBLISHED BY

ஊழல் எதிர்ப்பு இயக்கம் சென்னை

பதிவு மற்றும் செயல் அலுவலகம்: 155, "நம்பகம்",
கொன்னூர் நெடுஞ்சாலை, அன்பகம், சென்னை-600023
Cell:8778312823

e-mail:acmchennai2001@yahoo.com

website:anticorruptionchennai.com

# தலைவர் மடல்

அன்பார்ந்த உறுப்பினர் சகோதர சகோதரிகளே !

வணக்கம். இம்மடல் மூலம் மீண்டும் உங்களை தொடர்பு கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**கோவிட்-19 எச்சரிக்கை**:- கோவிட்-19 வைரசுக்கு தமிழகமும் இந்த நாடும் பல்லாயிரம் உயிர்களை பலி கொடுத்துவிட்டது! பலி கொடுத்துவருகிறது!!. கொரோனாவால் இனி ஒரு பலி கூட இருக்கக்கூடாது. தற்போது கோவிட்-19 வைரஸ் மூன்றாம் அலை ஐரோப்பாவில் தலை தூக்க ஆரம்பித்துவிட்டது. மேலும், இது பல்வேறு பரிணாமம் எடுக்கிறது. எனவே, ஒவ்வொரு உறுப்பினரும், கோவிட்-19லிருந்து தம்மையும் சமூகத்தையும் பாதுகாத்துக்கொள்ள, அரசு தடுப்பு ஊசியை இரு முறையும் உடனடியாக போட்டுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். தடுப்பூசி போட்டுக் கொண்டாலும், தொடர்ந்து அரசு அறிவித்துள்ள பாதுகாப்பு நெறிமுறைகளைக் கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டுகிறோம்.

**ஊழலின் புதிய பரிணாமம்**: சென்ற அதிமுக ஆட்சியிலும், திராவிட கட்சிகளின் ஆட்சியில் இருப்பது போலவே, ஊழல் வழக்கம் போல் தாண்டவம் ஆடியது. அரசுப் பணிகளுக்கான ஒப்பந்தங்கள் ஆட்சியாளர்களின் குடும்பங்களுக்கே கொடுக்கப்பட்டது என்பது ஊரறிந்த உண்மை. நடைபெறும் வழக்குகளே இதற்கு சாட்சி. இவர்கள், ஆட்சி முடியும் தருவாயில், மாபெரும் ஊழலை,அரங்கேற்றி, அதாவது வன்னியர்களுக்கான 10.5% இட ஒதுக்கீடு கொடுத்து, கோடிக்கனக்கான வன்னியர் சமுதயத்திற்கே துரோகம் ஒன்றை அரங்கேற்றி விட்டனர். இதனால், அழிக்கப்பட வேண்டிய சாதிப் பிரச்சினையானது சமூக ஊடகங்களின் விவாத பொருளாகி, விட்டது. தமிழகத்தின் அமைதிக்கு நல்லது இல்லை என்றதும், "தொடர்ந்து கொள்ளை அடிக்க வேண்டும்!, அதற்கு ஆட்சிக் கட்டிலில் அமர வேண்டும்!!" என்ற பேராசையின் விளைவே இந்த இடஒதுக்கீடு. ஆகா!! இதுதான், மாபெரும் ஊழல்.

எந்தவித சட்ட அறிவும் இல்லாத ஒரு சாதாரண பாமரனுமக்கும் தெரியும், " ஒரு சமுகத்திற்கு இட ஒதுக்கீடு கொடுக்க வேண்டுமாயின், அந்த சமூகம், அரசு வேலை வாய்ப்புகளில் மற்ற சமுகத்தினருடன் ஒப்பிட்டு பார்க்கையில் பின்தங்கியுள்ளதா? என்று ஆராய்ந்து அவ்வாறு பின்தங்கியிருப்பின் கண்டிப்பாக அந்த சமுகமும் உரிய பிரதிநித்துவம் பெறும் வகையில் இடஒதுக்கீடு கொடுக்கப்பட வேண்டும்" என்பது. ஆனால், நம்மை கடந்த 5 ஆண்டுகள் ஆட்சி செய்த ஆட்சியாளர்களுக்கு இது தெரியவில்லை. பதவி மோகம், உச்சஞ் தலைக்கேறி இருந்ததுவே இதற்குக் காரணம். ஆக, தாம் ஊழல் செய்து சொத்து சேர்க்க, சமூக அமைதியையும் காவு கொடுக்கத்துணியும் மாபாவிகளிடம்தான் இந்த ஆட்சி இதுகாறும் இருந்து வந்துள்ளது என்பதும், வாக்குக்குக் காசு வாங்கும் நம் மக்கள்தான் இதற்குக் காரணம் என்பதும், இந்த நாட்டின் குடிமகன் என்ற வகையில் நம்மை கூனிக்குறுக வைக்கிறது. பண்டைய இலக்கியங்களில் நாம் படிக்கும் "தமிழனின் மானமும் வீரமும்" பொய்யா?. அல்லது, காலப்போக்கில், நாம் இவ்வாறு ஆகிவிட்டோமா! என்பதும் ஒன்றும் புரியவில்லை.

மேலும், ஜாதிவாரிக் கணக்கெடுக்கவும், வன்னியர்கள் இட ஒதுக்கீட்டில் பின்தங்கியிருப்பதை கண்டறியவும் ஒரு தனி கமிஷனை நியமித்து விட்டு அந்த கமிஷன் தமது பணியினை துவங்கிய ஒருசில நாட்களிலேயே 10.5% இட ஒதுக்கீடு சட்டம் இயற்றப்பட்டது. என்னே ஒரு முட்டாள்தனம்! இந்த அவலம், தற்போது, மாண்புமிகு உயநீதி மன்றத்தால் ரத்து செய்யப்பட்டுவிட்டது. ஆக,, உண்மையில், வன்னியர்களுக்கு இடஒதுக்கீடு கிடைக்க வேண்டிய வகையில் புள்ளி விவரங்கள் இருப்பதையும் கண்டறிய இயலாத நிலை ஏற்பட்டுவிட்டது. ஆக, தமிழகத்தில் உள்ள ஒரு பெரும்பானமையான சமுக மக்கள் ஆசை காட்டி ஏமாற்றப்பட்டுள்ளார்கள் என்பது தான் உண்மை. சமுக ஊடகங்களில் உயர்நீதி மன்றம் ஏதோ தவறிழைத்துவிட்டது போலவும், நீதிபதிகளின் ஜாதிரீதியான விமர்சனங்களும் முன்வைக்கபடுவது மிகவும் வேதனையாக உள்ளது. இதில் நீதிமண்றம் என்ன செய்யும்? நீதிமன்றம் சட்டத்தின்படி மட்டுமே செயல்படும். ஒரு சட்டக்கல்லூரி மாணவனிடம் கேட்டாலே, "இந்த இடஒதுக்கீடு சட்டம் செல்லாது" என்று கூறிவிடுவார். ஆக, இது

போன்ற முட்டாள்தனமான செயல்களுக்கு நீதிமன்றம் ஒப்புதல் அளித்தால் சட்டத்தின் ஆட்சியே செத்துவிட்டது என்பதாகிவிடும். ஆகவே, நீதிமன்றம் இதில் எந்த தவறும் செய்யவில்லை என்பதுவே உண்மை.

ஆட்சியாளர்கள், இதுபோன்ற மக்களின் உணர்ச்சிகளை பாதிக்கும் வகையிலான ஒரு முடிவு எடுக்கும் முன் ஆயிரம் தடவை யோசிக்க வேண்டும் என்பதினை புரிந்து கொள்ள வேண்டும். தற்போதைய திமுக ஆட்சியாவது, இந்த சட்டத்தினை நிறுத்தி வைத்துவிட்டு, நியமிக்கப்பட்ட கமிஷனை செயல்படவிட்டு உரிய புள்ளிவிபரங்களை பெற்றுப் பின்னர் இறுதி முடிவெடுக்கப்படும் என்று நீதிமன்றத்தில் தெரிவித்து இருப்பின் இந்த நிலையை தவிர்திருக்கலாம். ஆனால், இவர்களும், காப்பாற்ற முடியாத ஒரு சட்டத்தை காப்பாற்றுவது போல அரசியல் செய்தனர். ஆக, எந்த ஆட்சியாளரும், அனைவருக்கும், பொதுவாக ஒரு நிலை எடுத்து உண்மை நிலைமையைத் தெரிந்துகொண்டு ஒரு சரியான முடிவை எடுக்கத் தயாரில்லை. இதுதான் இந்த நாட்டின் அவலநிலை! எவ்வளவு படித்தும், ஜாதி, மதம் என்ற குறுகிய வட்டத்திற்குள் அடங்காமல், தமது குடும்ப உறுப்பினர்களுக்கு, நேர்மையான பாகுபாடில்லாமல் சிந்தனையை செய்யும் பக்குவத்தையும் போதித்தால் மட்டுமே, நம் இயக்க லட்சியமான, ஒரு ஊழலற்ற ஒரு சமுதாயம் உருவாக்க முடியும். இதை நோக்கி நாம் செல்வோம்.

இவண்,
(ந.சுப்ரமணியன்

**நேர்மை நெறியில் குறைந்த செலவில் விளம்பரம் செய்து பயன் பெருவீர்!**
**விளம்பரக்கட்டண விவரம்**
**முழுப்பக்கம் ரூ 2000/-; அரைப்பக்கம் ரூ 1000/-; கால் பக்கம் ரூ 500/-.**
**இதழில் வருகின்ற கட்டுரைகள், விளம்பரங்கள் படைப்பாளியையே சார்ந்தது**
**நேர்மை நெறி நிர்வாகிகளோ, ஆசிரியரோ பொறுப்பல்ல.**



# வாராக் கடன்களுக்கு தனி வங்கி தேவையா?

கார்த்திகை ராஜன்
பொதுச்செயலாளர்

இந்திய பொதுத்துறை வங்கிகளில் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, பஞ்சாப் நேஷ்னல் வங்கி, பாங்க் ஆ பரோடா ஆகிய வங்கிகளில் வாராக் கடன் அளவு ஒவ்வொரு காலாண்டும் அதிகரித்து வரும் நிலையில், இவ்வங்கியின் நிதி நிலை மிகவும் மோசமான நிலையை அடைந்து வருகிறது. இந்த 4 முக்கிய வங்கிகளின் மொத்த கடனில் வர்த்தகத்தில் 16.2 முதல் 17.6 சதவீதம் வரையிலான கடன்கள் திரும்பி வராத நிலையில் உள்ளது. பொதுத்துறை வங்கிகளில் வாராக் கடன் பிரச்சனை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், இப்பிரச்சனையைக் கையாளுவதற்காகவே தனியாக ஒரு வங்கியை உருவாக்கத் திட்டமிடப்பட்டு மத்திய அரசால் **National Reconstruction Company Limited (NARCL)** என்ற அமைப்பு தொடங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மத்திய அரசு ரூ 30,600 கொடிக்கு உத்தரவாதம் கொடுத்துள்ளது.

இதற்கான அறிவிப்பை மத்திய அரசு வருகிற பிப்ரவரி 1ஆம் தேதி தாக்கல் செய்யப்படும் பட்ஜெட் அறிக்கையில் அறிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சிறப்பு வங்கி வாராக் கடனுக்காகச் சிறப்பு வங்கி அமைக்கப்பட்டால் பொதுத்துறை வங்கியில் இருக்கும் அனைத்து வராக் கடனும் இப்புதிய வங்கிக்கு மாற்றப்பட்டுப் பொதுத்துறை வங்கியின் நிதிநிலை மேம்படுத்தப்படும். இதனால் பொதுத்துறை வங்கிகளின் நிதிநிலை மட்டும் அல்லாமல் சந்தை மதிப்பும் பெரிய அளவில் உயரும். பொதுத்துறை வங்கிகள் நிம்மதி மேலும் வாராக் கடனை வசூலிக்கும் பணி, கடனுக்கான தீர்வு காணும் பணி அனைத்தையும் இந்தப் புதிய வங்கிகள் மேற்கொள்ளும், புதிய வர்த்தகத்தை ஈர்க்கும் பணியும், வாடிக்கையாளர்களை ஈர்க்கும் பணிகளையும் பொதுத்துறை வங்கிகள் செய்யும். இதனால் அடுத்தச் சில வருடத்திற்குள் நாட்டின் பொதுத்துறை வங்கிகளின் நிதிநிலை மேம்பட்டு பெரிய அளவில் முன்னேற்றம் அடையும்.

மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ஏற்கனவே இந்தியா இதுவரை பார்க்காத பட்ஜெட் அறிக்கையைப் பார்க்கப் போகிறது எனத் தெரிவித்த நிலையில், இந்த வாராக் கடனுக்கான வங்கி மிகப்பெரிய அறிவிப்பாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இப்புதிய வங்கியின் செயல்பாடுகள் இந்திய வங்கித்துறையைப் பெரிய அளவில் மாற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது. நிதி தேவைக்கான தீர்வு மேலும் இப்புதிய வாராக் கடன் வங்கிக்கு அதிகளவிலான நிதி தேவை இருக்கும் காரணத்தால் இதை எப்படி மத்திய அரசும், பொதுத்துறை வங்கிகளும் செயல்படுத்தப் போகிறது என்ற கேள்வியும் உள்ளது. குறிப்பாக இந்திய கார்ப்பரேட் நிறுவனங்கள் மீதான வாராக் கடன் மீது எப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கும்? இந்தச் சிறப்பு வங்கிக்கு யார் தலைவர்..? எனப் பல கேள்விகள் இந்த அறிவிப்பைச் சுற்றி எழுந்துள்ளது.

## மத்திய அரசின் கடந்த 7 ஆண்டு தள்ளுபடிகள்

வங்கிகளை கடன் பிரச்னையில் இருந்து மீட்டெடுக்கும் முயற்சியாக, கடந்தாண்டு மக்களிடம் இருந்து பெற்ற வரிப் பணத்தை வங்கிகளுக்கு அரசு வழங்கியது. ஆனால் வங்கியோ வாராக்கடன்களை மீட்டெடுக்க பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை எடுக்காமல் அதனை குறைத்துக் காட்டுவதிலேயே குறியாக உள்ளது. இதற்காக வாராக்கடன்களை ரத்து செய்தும் வருகிறது. கடந்த 10 ஆண்டுகளில் மொத்தமாக 7 லட்சம் கோடி வாராக்கடன்களை வங்கிகள் ரத்து செய்துள்ளது. அதில் கடந்த 2014-ஆம் ஏப்ரல் மாதத்தில் இருந்து தற்போது வரை 5,55,603 கோடி வாராக்கடன் ரத்து செய்யப்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் ரத்து செய்யப்பட்ட வாராக்கடன்களில் 80 சதவீத வாராக்கடன்கள் கடந்த 5 ஆண்டுகளிலேயே ரத்து செய்யப்பட்டுள்ளது.

## உண்மை நிலவரம்:

இது உலகை ஏமாற்றும் உலக பொருளாதார குண்டர்களின் சூழ்ச்சி இது. இப்படி ஒன்றை ஏற்படுத்தி விட்டால் , வராமல் போன கடன் வந்துவிட்டதாக அணைத்து வங்கிகளும் கணக்கு காட்டிவிடலாம் . பின்பு அதே பணத்தில் (அதாவது வராமல் போன பணத்தில்) இந்த புதிய கம்பெனியில் முதலீடு செய்து விட்டதாகவும் கணக்கு காட்டிவிடலாம். இவை யெல்லாம் உலக

பொருளாதார விதிகளில் ஒன்று. சீனா உள்ளிட்ட நாடுகளில் ஏற்கனவே நஷ்டமடைந்த பெட்ரோலிய நிறுவனங்கள், ஒன்றுக்கும் உதவாத சொத்துக்களை, புதிதாக ஒரு கம்பெனி உருவாக்கி அதற்கு விற்று அந்த பணத்தை அதில் முதலீடும் செய்து கோல் போடுகின்றன. அதாவது அனைத்தையும் பேப்பரிலேயே எழுதிக்காட்டி வருமானம் வந்துவிட்டதாகவும், வளர்ச்சியடைந்து விட்டதாகவும் ஒட்டு மொத்த பொருளாதாரமும் வளர்ந்து விட்டதாகவும் கணக்கு காட்டிக்கொண்டே செல்கிறார்கள். உலக பொருளாதார கணக்கின்படி ஒரு ருபாய் அல்லது ஒரு டாலரின் மதிப்பு ஒரு லட்சம் ருபாய் அல்லது ஒரு லட்சம் டாலர் ஆகிவிட்டது.

வீட்டில் படுக்கை அறையிலுள்ள குப்பையைத் தூக்கி ஸ்டோர் அறையில் தூக்கிப் போட்டால், நமது வீட்டிலுள்ள குப்பை வெளியே போய்விட்டதாக அர்த்தமா? இது அதைப் போலத்தான். வாரக்கடன்கள் வங்கியில் இருந்தாலும் ,புதிய அமைப்பில் இருந்தாலும் எல்லாம் ஒன்றே. இந்தப் புதிய முறை ஒரு கணக்கியல் வித்தை **(Accounting Jugglery)** மட்டுமே. இப்படி உலகமெல்லாம் ஏமாளிகள், மூடர்கள், விஞ்ஞான மூடர்கள் உருவாவார்கள் என்று எவனும் அக்காலத்தில் கனவு கூட கண்டிருக்கமாட்டான். அப்படி ஒரு வளர்ச்சி: விஞ்ஞான வளர்ச்சி என்று அனைவரும் புத்தி பேதலித்து திரிகிறார்கள்.

புதிதாக தொடங்கபடவுள்ள வாராக்கடன் வங்கிக்கோ,(**NARCL)** அல்லது நிவாகிக்கப்போகும் (IDRCL) க்கோ கடனை வசூலிக்க எந்த விதமான சிறப்பு தகுதியோ, அதிகாரமோ கிடையாது. உண்மையில் கடன் கொடுத்த வங்கிக்கு கடனாளியைப் பற்றி அதிக அனுபவம் இருக்கும். புதிய அமைப்புக்கு அவ்வாறு எதுவும் இருக்க வாய்ப்பில்லை .

சுமார் 90,000 ஆயிரம் கோடி ரூபாய்க்கான வாராக்கடன்கள் புதிய அமைப்புக்கு மாற்றப்படவுள்ளன. இந்த அமைப்பால் கடன் முழுவதையும் வசூல் செய்ய முடியவில்லை யென்றால் மத்திய அரசு ரூபாய் 30,600 கோடி வரை உத்தரவதம் (Guarantee ) கொடுக்கும். அரசாங்கம் இது வரை செய்த தள்ளுபடிகள் போக இதுவும் வரி செலுத்துவோரின் பணத்திலிருந்து கடன்காரர்களுக்குச் செலுத்துவதால் இது கடன்காரர்களுக்கு மக்கள் செலுத்தும் கப்பத்துக்கு சமமாகும்.

**<u>கடன்களை வசூலிக்கத் தேவையான கண்டிப்பு முறைகள்</u>**

வங்கிகளுக்கான வாராக்கடன்களைக் குறைப்பதற்கான வழி- கடன்களை வசூலிப்பதுதானே யொழிய, அந்தக்கடன்களை வேறு ஒரு நிறுவனத்திற்கு மாற்றுவது அல்ல. வாராக்கடங்களை இவ்வாறு மாற்றுவதற்கு வழி உண்டானால், வங்கிகள் மேலும் பொறுப்பில்லாமல் கடன்களை வழங்கி, மற்றுமொரு வாராக்கடன் சூழலையே உருவாக்கும்.

கடன் வழங்கும் முன் சரியானமதிப்பீடுகளும், கடன் வழங்கிய பின்னர் சரியான கண்காணித்தலும் அவசியம். தோல்வியுற்ற நிறுவனங்களைக் காலத்தே கண்டறிந்து கணக்கை முடிப்பதும் அவசியம். வங்கிக்கடன்களைத் தவறாகப் பயன்படுத்தி ஏமாற்றிய நிறுவனங்களையும், அதன் நிறுவனர்களையும் உள்ளே தள்ளி, அவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் அவசியம். குறிப்பாக அதிகாரவர்க்கம், அரசியல்வாதிகளின் குறுக்கீடு கூடவே கூடாது.

**எனவே, வாராக் கடன்களுக்கு தனி வங்கி தேவையில்லை: அது ஒரு ஏமாற்று வேலையே.**

<u>இயக்கத்துக்கு நன்கொடைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.</u>
நன்கொடைகள். வருமான வரிச்சட்டம் பிரிவு **80 (G)** யின் கீழ் விலக்கு(சலுகை) உள்ளது. பணத்தை கீழ்க்கண்ட வங்கிக்கு **NEFT** மூலமாக அனுப்பலாம் .
**Indian OverSeas Bank, Ayanavaram Branch (IFSC Code: IOBA0000009)**
**Savings A/C No: 000901000041657**

# ஏர் இந்தியாவின் 111 விமானங்களை டாடாவிற்கு பரிசளித்த பாஜக அரசு!

***- சாவித்திரி கண்ணன், பீட்டர் துரைராஜ்***

இப்படி எல்லாம் கூட நடக்குமா..? என்று ஆச்சரியப்படத்தக்க வகையில் இந்தியாவின் மாபெரும் நிறுவனமான ஏர் இந்தியா விற்பனை நடந்துள்ளது. நஷ்டத்திற்கே வழியில்லாத லாபகரமான விமான சேவைத் தொழிலை அரசியல்வாதிகளும், அதிகாரிகளுமாக கூட்டுச் சேர்ந்து சீரழித்தது போதாது என்று இன்று கிட்டத்தட்ட அடிமாட்டு விலைக்கு டாடாவிற்கு தந்துவிட்டனர்!

கம்யூனிஸ்ட் தலைவர் சீத்தாராம் யெச்சூரி இந்த விற்பனை குறித்து கொந்தளித்துள்ளார் "நாட்டின் தேசிய சொத்துகளை மத்திய அரசு இடைவிடாமல் சூறையாடி வருகிறது. டாடா நிறுவனத்துக்கு ஏர் இந்தியா ரூ.18 ஆயிரம் கோடிக்கு விற்கப்பட்டுள்ளது. இது, டாடாவுக்கு மோடி அரசு அளிக்கும் இலவச பரிசு போன்றது தான். இது பட்டப்பகலில் நெடுஞ்சாலைகளில் நடக்கும் கொள்ளையை போல் நடந்துள்ளது.

பெரும் சொத்து மதிப்புள்ள ஏர் இந்தியாவின் 64,262 கோடி கடனில் டாடா நிறுவனம் ரூ.15 ஆயிரத்து 300 கோடி கடனை ஏற்றுக்கொண்டு, ரூ.2 ஆயிரத்து 700 கோடியை மட்டுமே மத்திய அரசுக்கு கொடுக்கிறது. ஏர் இந்தியாவின் மீதி கடன் ரூ.46 ஆயிரத்து 262 கோடி கடனை மத்திய அரசு பொதுமக்கள் தலையில் தான் கட்டப் போகிறது! அதே சமயத்தில், ஏர் இந்தியா வாங்கிய சொத்துகள், விமானங்கள் உட்பட டாடா நிறுவனத்துக்கு சொந்தமாகி விடும்." என்கிறார் **சீதாராம் யெச்சூரி**.

ஏர் இந்தியா விற்பனை தொடர்பாக காங்கிரஸ் தலைவர், **பிரியங்கா காந்தி**, "மோடிஜி தனக்காக 2 விமானங்களை ரூ.16,000 கோடிக்கு வாங்கியுள்ளார். ஆனால் இந்திய அரசின் சொத்தாகிய நூற்றுக்கும் அதிகமான விமனங்களை கொண்டுள்ள ஏர் இந்தியாவை ரூ.18,000 கோடிக்கு மோடிஜி தன் பில்லியனர் நண்பர்களுக்கு பரிசாக அளித்துள்ளார்" என்று கிண்டலடித்ததுள்ளார்.

ஏர் இந்தியா நிறுவன ஊழியர்களும், இண்டரப்ஸ் நிறுவனமும் இணைந்து தாங்கள் வாங்கி ஏர் இந்தியாவை லாபகரமாக நடத்த விண்ணப்பித்தனர். இண்டரப்ஸ் நிறுவனத் தலைவர் 51 சதவிகித பங்குகளை ஏர் இந்தியா ஊழியர்களுக்கும், 49 சதவிகித பங்குகளை தங்களுக்கும் எடுத்துக் கொள்வதாகவும், இந்த 51 சதவிகித பங்கிற்காக ஊழியர்கள் பணம் எதுவும் தரத் தேவையில்லை என்றும், . 51 சதவிகித கட்டுப்பாட்டு பங்குகள் ஏர் இந்தியா நிறுவன ஊழியர்களின் ஆழமான மதிப்பிட முடியாத பங்களிப்புக்காக அவர்கள் வசம் வழங்கப்படும் என்றும் கூறியிருந்தார்! ஆனால், இதை மோடி அரசு நிராகரித்துவிட்டது!




"இரண்டு ஆண்டுகளுக்கு அரசின் தலையீடு இல்லாமல் சுயேச்சையாக நிர்வாகத்தை நடத்த ஏர் இந்தியாவிற்கு அனுமதி கொடுங்கள், இலாபத்தைக் காட்டுகிறோம் என ஊழியர் சங்கங்கள் ஒருமித்த குரல் எழுப்பின. இதனை அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. இங்கு 12 சங்கங்கள் உள்ளன. அரசுக்கு சங்கடமான நிலை வரக் கூடாது என்பதற்காக சங்கங்களின் ஒற்றுமையை அரசு குலைத்து விட்டது" என்றார் அகில இந்திய சேவைப் பொறியாளர்கள் தொழிற்சங்கத்தின் **விலாஸ் கிரிதர்**.

**கிரிதர் விலாஸ்**

தற்போது ஏர் இந்தியா நிறுவனத்தை டாடா குழுமம் வாங்கியுள்ள நிலையில், ஊழியர்கள் தங்கியுள்ள ஏர் இந்தியா நிறுவனத்திற்கு சொந்தமான குடியிருப்புகளை காலி செய்ய வேண்டும் என்று ஊழியர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இதை கண்டித்து நவம்பர் மாதத்தில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட போவதாக தொழிற் சங்கங்கள் அறிவித்துள்ளன.

இந்த விவகாரம் தொடர்பாக மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் **சு.வெங்கடேசன்** மத்திய விமான போக்குவரத்து அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியாவுக்கு கடிதம் எழுதியுள்ளார். அதில், ஏர் இந்தியா நிறுவனத்தை கைமாற்றும் ஒப்பந்தம் கையெழுத்தான ஆறு மாதங்களுக்குள் ஊழியர்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள குடியிருப்புகளை காலி செய்ய வேண்டும் என்று சுமார் 7 ஆயிரம் ஊழியர்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. அவ்வாறு குடியிருப்புகளை காலி செய்யவில்லை என்றால் ரூ. 15 லட்சம் அபராதத்துடன் இரண்டு மடங்கு வாடகை செலுத்தவேண்டுமாம்!

இந்த ஊழியர்கள் ஏர் இந்தியாவின் வளர்ச்சிக்கு தற்போது வரை பங்கேற்றி கொண்டிருப்பவர்கள். அவர்கள் மரியாதையாக நடத்தப்பட வேண்டும். ஆனால், தனியார் மயத்துக்கு பின் ஊழியர்களின் நிலை என்ன என்பதை நிர்வாகத்தின் அணுகுமுறை காட்டுகிறது. அவர்களின் மதிப்புக்கு சவால் விடுக்கப்பட்டுள்ளது. இந்த விவகாரத்தில் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கேட்டுகொண்டுள்ளார்!

ஆனால், அரசும் டாடா நிறுவனமும் செய்த ஒப்பந்தப்படி, "ஊழியர்கள் யாரையும் ஒரு வருடத்திற்கு வேலை நீக்கம் செய்ய மாட்டோம்" என்றது! "ஒரு வருடத்திற்கு பிறகே, விருப்ப ஓய்வு திட்டம் அறிவித்து வெளியேற்றப்படுவார்கள்" என்றது கவனத்திற்கு உரியது!

1932 ஆம் ஆண்டு **ஜே ஆர் டி டாடா தான்** இந்தியாவில் முதலில் விமான சேவையை தொடங்கினார். 1948 ஆம் ஆண்டு 'டாடா ஏர்லைன்ஸ் ஏர் இந்தியா' என்று இருந்த வந்த விமான சேவையின் 49 சத பங்குகளை, விடுதலை அடைந்த இந்தியா வாங்கியது. அதைத் தொடர்ந்து 1953 ஆம் ஆண்டு அதனை தேசியமயமாக்கியது. பிறகு ஏர் லைன்ஸ் என்ற பெயரில் உள்நாட்டு சேவையையும், ஏர் இந்தியா என்ற பெயரில் வெளிநாட்டு சேவையையும் நடத்தி வந்தது. இதன் சேவை உலகம் முழுவதும் விரவிக் கிடக்கிறது. 1980 வரை லாபகரமாக இயங்கிய ஏர் இந்தியா அதன் பிறகான தவறான நிர்வாகத்தால் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்தது. இதை சாக்கிட்டு இந்திய அரசு விற்க முடிவெடுத்தது.

ஏர் இந்தியா நிறுவனங்களுக்கு ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ், அலையன்ஸ் ஏர், ஏர் இந்தியா சாட்ஸ் ஏர்போர்ட் சர்வீஸஸ், ஏர் இந்தியா சார்ட்டர்ஸ், ஓட்டல் கார்பரேஷன் ஆப் இந்தியா, ஏர் இந்தியா ஏர் டிரான்ஸ்போர்ட் சர்வீஸ் என 6 துணை நிறுவனங்கள் உள்ளன. இவற்றில் 3 நிறுவனங்கள் நஷ்டத்தில் இயங்குபவை. இவற்றின் சொத்து மதிப்பு ரூ.29 ஆயிரம் கோடி என மதிப்பிடப் பட்டுள்ளது. இந்நிறுவனத்தின் 2 ஓட்டல்கள் உட்பட ரியல் எஸ்டேட் சொத்து மட்டுமே ரூ.8 ஆயிரம் கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தின் மொத்த சொத்து மதிப்பும் மேலும் கூடுதலாக இருக்கும். அனைத்து சொத்துக்களையும் இன்னும் யாரும் முழுமையாக மதிப்பிடவில்லை.

ஏர் இந்தியாவில் பணிபுரியும் தொழிலாளர்களாகிய நாங்கள் 15, 20 ஆண்டுகளாகவே வெறுப்படைந்து விட்டோம். எங்களுக்கு மாத சம்பளம் கூட ஒழுங்காக கிடைப்பதில்லை. சில சமயங்களில் 15 தேதி, 20 தேதிகளில்தான் சம்பளம் கிடைக்கும். எங்களுக்கான வருங்கால வைப்பு நிதி போன்றவை சிக்கலாகியுள்ளன. வான் வழி தனியார் நிறுவனங்களுக்கு திறந்து விடப்பட்டது மட்டுமல்ல, அவர்களுக்கு முன்னுரிமையும், சலுகைகளும் வழங்கி ஏர் இந்தியாவை பின்னுக்கு தள்ளினார்கள். இதனால், தனியார் விமான நிறுவனங்கள் இலாபம் அடையத் தொடங்கினார்கள். ஏர் இந்தியா நட்டம் அடையத் தொடங்கியது " என்றார், விலாஸ் கிரிதர்.

ஓய்வு பெற்ற பிறகும் பொது மேலாளர், கேப்டன் போன்ற உயர் பதவிகளில் உள்ளவர்களில் தங்களுக்கு வேண்டியப்பட்டவர்களுக்கு இரண்டு ஆண்டுகள், ஐந்து ஆண்டுகள் என அதே சம்பளம், சலுகை கொடுத்து பதவி நீடிப்பு கொடுத்தார்கள். ஏர் இந்தியாவில் எடுத்த முடிவுகளுக்கு யாரும்

பொறுப்பேற்றுக் கொள்ளவில்லை. குறிப்பிட்ட முடிவினால் குறிப்பிட்ட வழித்தடத்தில் நட்டம் ஏற்பட்டால் அந்த முடிவுக்கு யாரும் பொறுப்பாளியாக்கப்படவில்லை.

அதே போல ஏர் இந்தியா வசம் இருந்த இலாபம் ஈட்டும் வழித்தடங்கள் ஜெட் ஏர்வேஸ், ஸ்பைஸ் ஜெட் போன்ற தனியார் நிறுவனங்கள் பலன் அடையும் வகையில் ஒதுக்கப்பட்டது. உதாரணமாக மும்பையிலிருந்து, நியூயார்க் செல்லும் பயணத்திற்கு முதலில் ஜெட் ஏர்வேஸ் விமானத்தை அனுமதித்தார்கள். அதன் பிறகு செல்லும் ஏர் இந்தியா விமானம் பயணிகள் இல்லாமல் செல்லும். அதே போல தனியார் நிறுவன விமானங்களுக்கு பயணிகள் அதிகம் பயணிக்கும் நேரத்தை (Prime time) ஒதுக்கிவிட்டு, ஏர் இந்தியா விமானங்களுக்கு மற்ற நேரத்தை ஒதுக்கினார்கள். இது போன்ற ஒரவஞ்சனை முடிவுகளால்தான் ஏர் இந்தியா நட்டத்தை சந்தித்தது. வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் உள்ள கோடிக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துகள் டாடாவிற்கு கிடைக்கும். இப்போது ஏர் இந்தியாவிடம் 111 விமானங்கள் உள்ளன. இவைகளை ஏறக்குறைய இலவசமாக டாடாவிற்கு விற்பனை செய்கிறார்கள்" என்றார் மும்பையைச் சார்ந்த விலாஸ் கிரிதர்.

டாடாவிடம் போன பிறகு நிலமை என்னவாகும்? என்று கேட்டதற்கு "ஏர் இந்தியாவின் வழித் தடமும் (Slot), பயணிகள் எண்ணிக்கையும்தான் டாடாவிற்குத் தேவை. அவர்களிடம் ஏற்கனவே ஏர் ஏசியா, விஸ்டாரா ஏர்லைன்ஸ் உள்ளது. அதிலுள்ள கட்டமைப்புகளைப் பயன்படுத்தி இலாபம் சம்பாதிப்பார்கள். இப்போது ஏர் இந்தியா வசம் உள்ள பாதுகாப்பு, மனித வள ஊழியர்கள் அவர்களுக்குத் தேவைப்பட மாட்டார்கள்" என்றார் விலாஸ் கிரிதர்.

"வளைகுடாப் போரின் போது 440 விமானங்கள் மூலம், தவித்துக் கொண்டிருந்த ஒரு இலட்சம் இந்தியரை ஏர் இந்தியா காப்பாற்றியது. சமீபத்தில் இந்தியர்கள் ஆப்கானிஸ்தானில் மாட்டிக் கொண்ட போது இந்திய அரசு நமது ஏர் இந்தியா விமானத்தை அனுப்பி, அங்கு தத்தளித்துக் கொண்டிருந்த 129 இந்தியர்களை பத்திரமாக மீட்டு வந்தது கொரோனா நெருக்கடி காலத்திலும் சேவை செய்துள்ளது. பூகம்பம், வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களின் போது இது போன்ற கட்டமைப்புகள் அவசியமானது. இந்தியா விடுதலை அடைந்த 75 ஆம் ஆண்டைக் கொண்டாடும் இந்த வேளையில், இலவசப் பரிசாக, ஏர் இந்தியாவை, டாடாவிற்கு வழங்கியுள்ளது. இதனை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம்" என்று ஐஎன்டியுசி, ஏஐடியுசி, சிஐடியு உள்ளிட்ட பத்து மத்திய தொழிற்சங்கங்களும், சுயேச்சையான சம்மேளனங்களும் அரசின் இந்த முடிவைக் கண்டித்து கூட்டறிக்கை வெளியிட்டுள்ளன.

**அமர்ஜித் கௌர்**

"சுதந்திரப் போராட்டத்தில் பங்கு பெறாத கட்சி ஆர்எஸ்எஸ். அவர்களுடைய பாஜக ஆட்சிதான் இப்போது நடந்துகொண்டிருக்கிறது. அவர்கள் கொள்கை ரீதியாகவே முதலாளிகளுக்கு ஆதரவான நிலை எடுப்பவர்கள். இதுபோன்ற பெரிய ஆலைகளை, பொதுத்துறைகளை நிறுவும்போதே எதிர்த்தவர்கள். எனவே தான் அவர்கள் ஆட்சி நடைபெறும் இந்த வாய்ப்பை பயன்படுத்தி அனைத்தையும் தனியார் மயமாக்கி வருகிறார்கள்.

ஏர் இந்தியா, இந்தியன் ஆயில் நிறுவனத்தில்தான் பெட்ரோலை நிரப்பும். டாடாவிடம் ஏர் இந்தியா நிறுவனம் சென்ற பிறகு, இந்தியன் ஆயில் நிறுவனத்தில் எரிபொருளை நிரப்ப மாட்டார்கள். இதனால் இந்தியாவின் பொதுத்துறை நிறுவனமான இந்தியன் ஆயில் பாதிப்படையும். அதே போல இப்போது அரசின் வசம் உள்ள கிட்டங்கிகளை ஏர் இந்தியா பயன்படுத்தாது. தனியார் கிட்டங்கிகளை பயன்படுத்துவார்கள். ஏற்கனவே விமான நிலையங்களை தனியார் மயமாக்கி வருகிறார்கள். இந்திய நாட்டின் சொத்துகளை திட்டமிட்டு தனியாருக்குச் சொந்தமாக்கி வருகிறது பாஜக" என்றார் ஏஐடியுசியின் பொதுச் செயலாளரான **அமர்ஜித் கௌர்**.

ஏர் இந்தியாவின் சின்னமான (symbol) மகாராஜா நடுத்தர வர்க்கத்தினருக்கு ஒருகாலத்தில் பிரியமான அடையாளம். அடித்தட்டு மக்களும் விமானத்தை பயன்படுத்தும் வகையில் வாய்ப்புகளும், சந்தையும் அதிகமாகி வரும் வேளையில் ஏர் இந்தியாவை விற்பதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

**நன்றி: சாவித்திரி கண்ணன், பீட்டர் துரைராஜ், (அறம் இதழ்)**

# ஒரே தலைவர் வ.உ.சிதம்பரம்..!

***உலகிலேயே 40 வருஷம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ஒரே தலைவர் வ.உ.சிதம்பரம்***

- அதிலும் கோவை சிறைதான், வஉசிக்குள் பெருமளவில் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது..!
- அந்த ஜெயிலர் பெயர் மிஞ்ஜேல்... ரொம்ப மோசமானவன்.. கொடூரக்காரன்..!
- ஜெயிலுக்குள் கொண்டு செல்லும்போதே, கை, கால்களை கட்டி தெருவெல்லாம் இழுத்து சென்றுள்ளனர்..! வஉசிக்கு சிறைக்குள் தனி ரூம்.. ஆனால் அதில் காற்று வசதி இல்லை.. சுத்தமும் சுகாதாரமும் இல்லை.. கால்களில் விலங்கு பூட்டப்பட்டுதான் வஉசியை அடைத்து வைத்தனர்..!
- ஜெயிலுக்குள் சென்றதுமே தலையை மொட்டை அடித்திருக்கிறார்கள். ஒரே ஒரு டிரஸ் தந்திருக்கிறார்கள்.. அதுகூட சாக்குப் பையால் தைத்தது.
- ஒருநாளைக்கு ஆயிரம் பேருக்கு சாப்பாடு போட்டவருக்கு, ஜெயிலில் கூழ் தந்தார்கள்.. அதுவும் புளித்து போயிருந்தது.. சில சமயம் அந்த கூழில் புழுக்கள் மிதக்குமாம்..!
   - உடல்நிலை மோசமானதால், ஒருநாள் மட்டும் அரசி சோறு கேட்டாராம் வஉசி.. அதற்காக 3 நாளைக்கு, அந்த கூழை கூட தராமல் பட்டினி போட்டுள்ளான் அந்த ஜெயிலர் மிஞ்ஜேல்.
- சணல் கிழிக்கும் மிஷினை கையாலேயே சுற்ற வேண்டும்.. இதுதான் வஉசிக்கு தரப்பட்ட முதல் வேலை... அப்படி செய்ததால், வஉசியின் கைகளில் உள்ள தோல் கிழிந்து ரத்தம் கொட்டி உள்ளது.. அதை பார்த்து ஒரு கைதி, மனசு கேட்காமல் ஓடிவந்து மிஷின் சுற்றுவதை தடுத்துள்ளார்..
- ஆனால் அந்த கைதியை அடித்து நொறுக்கினான் மிஞ்ஜேல்... பிறகு, கையால் செய்யும் வேலைகளை தராமல், செக்கிழுக்கும் வேலையை தந்துள்ளனர்.. அதாவது மாட்டுக்கு பதில் வஉசியை பூட்டினர்.. அதுவும் உச்சிவெயிலில்.. இதில் மயங்கி கீழே விழுந்துவிட்டால், சவுக்காலேயே அடிப்பார்கள்..!
- வஉசியின் மதிப்பு தெரிந்த கைதி ஒருவர், தன்னுடைய தலைக்கு மேல் 2 கைகளையும் கூப்பி "வணக்கம் ஐயா" என்றார்.. அவ்வளவுதான், ஜெயிலுக்குள் கலவரம் வெடித்து, ஒரு கைதி துப்பாக்கி சூட்டில் இறக்குமளவுக்கு பிரச்சனை செய்துவிட்டான் அந்த ஜெயிலர்.
- வஉசி விடுதலை செய்யப்பட்டும் தன்னுடைய வக்கீல் பணியை தொடர முடியாத அளவுக்கு லைசென்ஸ் பிடுங்கிவிட்டனர்.. ஒரு அரிசி கடையில் வேலை பார்த்தார்.. நாள் முழுக்க வேலை பார்த்துவிட்டு, 4 ஆழாக்கு அரிசியோடு வீட்டுக்கு போவாராம்.. இந்த விஷயம் தெரிந்த அந்த மளிகைக் கடைக்கு சீல் வைத்து விட்டனர் பிரிட்டிஷ் அதிகாரிகள்..!
- அரை வயிற்று கஞ்சிக்குகூட கஷ்டப்படும் நிலை வந்ததால்தான், தலையில் மண்ணெண்ணெய் சுமந்து விற்றுள்ளார்...!
- இதைவிட கொடுமை, தன்னுடைய வக்கீல் உரிமத்தை மீட்டெடுக்க கோர்ட்டில் வாதாடி உதவ வேண்டும் என்று வஉசி கேட்டதற்கு, மூத்த வக்கீலான மூதறிஞர் ராஜாஜி மறுத்துவிட்டாராம். சில சமயம் காந்தியை விட்டுத்தராமலும், சில சமயம் காந்தியின் கொள்கைகளை ஏற்க முடியாமலும் எதிர்த்துள்ளார் வஉசி..!
- வஉசி குடும்பம் வறுமையில் உள்ளதை கேள்விப்பட்டு, தென் ஆப்பிரிக்காவில் உள்ள தமிழர்கள், 5000 ரூபாய் நிதி திரட்டி காந்தியிடம் தந்திருக்கிறார்கள்.. "எப்படியாவது வஉசியிடம் இந்த பணத்தை

சேர்த்துவிடுங்கள்" என்றும் சொல்லி உள்ளனர்.. லெட்டர் மேல் லெட்டர் போட்டும் காந்திக்கு ஞாபகப்படுத்தி கொண்டே இருந்தனர்..!

- ஆனால் அந்த பணத்தை காந்தி, வஉசிக்கு தரவே இல்லையாம்.. "காந்தி கணக்கு" என்று நாம் சொல்கிறோமே.. அது இதுதான்! (திலகர், இந்த விஷயத்தில் தலையிட்டு பஞ்சாயத்து செய்து, அந்த பணத்தை வஉசிக்கு பெற்று தந்தது தனி கதை)
- வஉசிக்கு இணையான ஒரு தியாகியோ, போர்க்குணமுள்ள ஒரு தலைவரோ இந்திய அரசியலிலேயே கிடையாது. ஆனாலும் சொந்த கட்சியில் உரிய மரியாதையை, அவர் இறந்தும்கூட தராதது வருந்தத்தக்கது.. சில வழக்குகளை எதிர் கொள்வதற்கும் கூட அவருக்கு காங்கிரஸ் உதவவில்லை என்பது கசப்பான உண்மை..!
- உண்மையை சொல்வதானால், பிரிட்டிஷ் அரசின் ஒடுக்குமுறைக்கு ஆளாகி சீரழிந்ததைவிட, சொந்த கட்சியின் துரோகத்தால்தான் அதிகம் துவண்டுபோனார் வஉசி..!
- பல்லாண்டு காலமாய் அடிமைப்படுத்தியிருந்த வெள்ளையர்களுக்கு எதிராகக் கப்பல் விட்ட பெருமை இந்தியாவிலேயே தமிழன் வஉசிக்குதான் உண்டு..!
- இந்த தேசத்தின் தலைவராக உயர்ந்திருக்க கூடியவர் வஉசி.. ஆனால், வஉசியின் வரலாற்றை மறைத்துவிட்டு வாஞ்சிநாதனை பிரதானப்படுத்த காரணம் என்ன?
- 1806-ல் வேலூர் புரட்சியை அலட்சியப்படுத்திவிட்டு, 1857-ல் வந்த சிப்பாய் கலகத்தை பெரிதுபடுத்த காரணம் என்ன?
- ஒன்று மட்டும் விளங்குகிறது.. எப்பேர்ப்பட்ட தியாகத்தையே செய்திருந்தாலும், அதை தீர்மானிப்பது இந்திய அரசியலின் "சாதி" தான்..!
- இனியாகிலும் "வஉசி கப்பல் ஓட்டினார், செக்கிழுத்தார்" என்பதை மட்டுமே சொல்லி சுருக்கிவிடாமல், அவருடைய சமூக நீதி கொள்கையை மக்களிடையே, இன்றைய இளைஞர்கள் அழுத்தமாக பரப்ப செய்ய வேண்டும்..!
- தமிழர்களை மட்டுப்படுத்தவும், ஏளனப்படுத்தவும், யாருக்குமே தகுதி கிடையாது என்பதையும் செவிப்பறையில் ஓங்கி அறைந்து சொல்ல வேண்டும்..!

- **நன்றி: “ஹேமவந்தனா ரவீந்திரதாஸ்”**

## இயக்கத்துடன் தொடர்பு கொள்ள:

| | |
|---|---|
| திரு **N** சுப்ரமணியன், தலைவர் | **: 9444274352** |
| திரு **V** கார்த்திகை ராஜன், பொதுச்செயலாளர் | **: 87783 12823** |
| திருமதி பாக்யலட்சுமி, மேலாளர் | **: 90031 25142** |

**E- Mail** : **acmchennai2001@yahoo.co.in**
**Website** : **anticorruptionchennai.com**

# ரூபாய் 97,200 கோடியில் கோதாவரி - காவிரி இணைப்பு சாதமா? பாதகமா?

*பொறிஞர் அ.வீரப்பன்*

கோதாவரி - காவிரி இணைப்புத் திட்டத்தை விரைந்து செயல்படுத்திடவேண்டும் என்று முதலமைச்சர் ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்துகிறார்! இதன் மூலம் தமிழ்நாட்டின் தண்ணீர் பற்றாக்குறை சரி செய்யப்படும் என முதல்வர் உள்ளிட்ட பலரும் நம்புகின்றனர். முதலில் இது சாத்தியமா? என்பதே கேள்விக்குறி தான்! இதன் உண்மை நிலைமையினை விரிவாகப் பார்த்தால் எத்தனை சர்ச்சைகள் ,சவால்கள்,சங்கடங்கள் புதைந்துள்ளன..என வியப்பளிக்கிறது! வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில் இந்திய நதிகளை ஒருங்கிணைத்து - பல மாநிலங்களில் பெருமழை வெள்ளச் சேதங்களைக் குறைக்கவும், நாட்டின் ஒரு பகுதியில் கிடைக்கும் மிகை நீரை வறட்சியுள்ள தண்ணீர்ப் பற்றாக்குறை மாநிலங்களுக்குத் திருப்பவும் திட்டமிட்டனர்.

அதன் வழி தேசிய நீர்வள மேம்பாட்டு முகமை (National Water Development Agency - NWDA) - வட இந்தியாவில் 14 நதி இணைப்புகளையும், தென்னிந்தியாவில் 16 நதி இணைப்புகளையும் கண்டறிந்து அறிக்கை அளித்தது. அதன்படி தென்னிந்தியாவில் திட்டமிட்ட நதிநீர் இணைப்புகளில் தலையாயது - மகாநதி - கோதாவரி - காவிரி - வைகை - குண்டாறு இணைப்பாகும். இதிலும் (மகாநதியில் கிடைக்கப் பெறும் மிகை நீரளவு இன்னும் மிகச் சரியாக இறுதி செய்யப்படாமையால்) முதற்கட்டமாக கோதாவரி - கிருஷ்ணா - பெண்ணார் - காவிரி - வைகை - குண்டாறு இணைப்பைச் செயற்படுத்த தேசிய நீர்வளமேம்பாட்டு முகமை - விரிவான திட்ட அறிக்கையினை மார்ச் 2019 இல் அளித்துள்ளது.

இவ்வறிக்கையின்படி கோதாவரி நதியில் மிகைநீராக மதிப்பிடப்பட்ட 7000 மில்லியன் கன மீட்டர் (247 டிஎம்சி) நீரைத் திருப்பி - தெலுங்கானாவிற்கு 83 டிஎம்சி ஆந்திராவிற்கு 81 டிஎம்சி மற்றும் தமிழ்நாட்டிற்கு 83 டிஎம்சி வழங்கிடக் கணக்கிடப்பட்டுள்ளது.

கோதாவரி நதி இஞ்சம்பள்ளியிலிருந்து காவிரி கல்லணை வரை 1251.59 கிமீ தொலைவிற்குத் திறந்த கால்வாயாகவும் 21.87 கிமீ தொலைவிற்குச் சுரங்கங்கள் வழியாகவும் நீரைக் கொண்டுவர... 2018 - 2019 விலை வீதத்தில் ரூ.60,361 கோடி திட்டச் செலவாகும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. (2021 -2022 ஆண்டு விலை வீதம் என்றால் திட்டச் செலவு ரூ.80,000 கோடி ஆகலாம்) நிறைவேற்ற 5 ஆண்டுகள் என்றால் ரூ.97,2,00 கோடிக்குப் போகும். இப்படித் திருப்பப்படும் மிகை நீரானது 200 டிஎம்சி பாசனத்திற்காகவும் 18.40 டிஎம்சி தொழிற்சாலைகளின் பயன்பாட்டிற்காகவும் 13.57 டிஎம்சி குடிநீர் வழங்கலுக்காகவும் பிரித்து வழங்கப்படும். இதில் 38 கிளைக்கால்வாய்கள் 10 7 நேரடி மதகுகள் மூலம் பாசனத்திற்குரிய தண்ணீர் எடுத்துச் செல்லப்பட்டு 9.38 லட்சம் ஹெக்டர் (23.18 லட்சம் ஏக்கர்) நிலங்கள் பாசனம் பெறுமென மதிப் பிடப்பட்டுள்ளது.






ஆண்டில் ஜூன் முதல் அக்டோபர் வரை143 நாட்களுக்கு இத்தண்ணீர் திருப்பப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விணைப்புக் கால்வாயில் திருப்பப்படும் நீரினால் மூன்று மாநிலங்களிலும் சேர்த்து 7,94,733 ஹெக்டேர் (19.64 லட்சம் ஏக்கர்) நிலங்கள் பாசன வசதிபெறும் என்றும் கூடுதல் விளை பொருள்களின் மதிப்பு ரூ.7968.89 கோடி என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

**கோதாவரி - காவிரிக் கால்வாய் வரும் வழித்தடங்கள் எவை ?**

கோதாவரி ஆற்றில் புதியதாக ஏற்படுத்தப்படும் ஜனம்பெட் நீர்த்தேக்கத்திலிருந்து கிருஷ்ணா நதிக்கு எடுத்துச் செல்லக் கீழ்க்கண்ட வழித் தடங்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன.

- கோதாவரி (இஞ்சம்பள்ளி) - கிருஷ்ணா (நாகார்ஜூனா) இணைப்பு
- கிருஷ்ணா (நாகார்ஜூனா) - பெண்ணார் (சோமசீலா) இணைப்பு
- பெண்ணார் (சோமசீலா) - காவிரி (கல்லணை) இணைப்பு

(தமிழ்நாடு அரசு - கல்லணைக்குப் பதிலாகப் புதிதாக மாயனூரில் கட்டியுள்ள புதிய தடுப்பணைக்கு இணைக்குமாறு கோரியுள்ளது).

மத்திய நீர்வள ஆணையம் மதிப்பீட்டின்படி. 50% நம்பிக்கை அடிப்படையில் கோதாவரியில் 247 டிஎம்சிக்குக் குறைவின்றி தண்ணீர் கிடைக்கும் என்று தெளிவுபடுத்தியுள்ளது. 1252கிமீ தொலைவுள்ள திறந்த கால்வாய் வழித்தடங்கள் கோதாவரி, கிருஷ்ணா,பெண்ணார், பாலாறு ரூ காவிரி வடிநிலப்பகுதிகளில உள்ள மாவட்டங்கள், தெலுங்கானாவில் பத்ராத்திரி,கோத்த குடம், கம்மம், வாரங்கல்,சூர்யா பெட், நால்கோண்டா ஆந்திராவில் குண்டூர், பிரகாசம், நெல்லூர்,சித்தூர், தமிழ்நாட்டில் திருவள்ளுர், காஞ்சிபுரம். திருவண்ணாமலை,விழுப்புரம், கடலூர், பெரம்பலூர் , திருச்சி முதலியன இக்கால்வாய் நீரினால் பயன்பெறும்.

தமிழ்நாட்டிற்குள் வரும் போது வழியில் நீரிழப்பு போக 83 டிஎம்சி பெற அகலமும் 10 மீட்டர் உயரமும் கொண்ட திறந்த கால்வாய் தேவைப் படும். தெலங்கானா,ஆந்திரப் பிரதேசம் மற்றும் தமிழ்நாடு பாசன வசதி பெறும் கூடுதல் நிலப்பரப்பு :

- தெலங்கானா - 137150 ஹெக்டேர் (3,38,898 ஏக்கர்)
- ஆந்திரப் பிரதேசம் : 492281 ஹெக்டேர் (12,16,426 ஏக்கர்) 10
- தமிழ்நாடு : 308721 ஹெக்டேர் (7,62,850 ஏக்கர்)
- **மூன்று மாநிலங்களிலும் மொத்தப் பரப்பு : 9,38,152 ஹெக்டேர் (23,18,174 ஏக்கர்)**

இந்த அளவுத் தண்ணீரைக் கொண்டு செல்லும் வழித்தடத்திலுள்ள இயல்பான மட்ட அளவுகளைக் கருதி 4 கட்டங்களில் 196.50 மீட்டர் உயரத்திற்கு நீரேற்றமும் செய்ய வேண்டி வருகிறது. இதற்காக நீரேற்றும் நிலையங்களையும் புதிதாக நிறுவ வேண்டியிருக்கிறது.

**<u>இத்திட்டத்தில் உள்ள சிக்கல்கள்;</u>**

இத்திட்டம் இன்றைய அறிவியல் - பொறியியல் தொழில்நுட்பத்தில் நிறைவேற்றத்தக்கதே. எனினும் இத்திட்டத்தைச் செயற்படுத்தும் போது சில சங்கடங்கள் ஏற்படும்.

கோதாவரியிலிருந்து காவிரிக்குத் தண்ணீர் கொண்டுவரும் கால்வாயின் மொத்த நீளம் 1,252கிமீ. வரும்போது நீர் ஆவியாதலினால் 17.50 டிஎம்சி அளவு குறைந்துவிடும். இன்றைய நிலையில் ஆந்திரப் பிரதேசத்தின் கிருஷ்ணாநதியில் கிடைக்கும் நீரளவில் பற்றாக்குறையளவு உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. எனவே 12.16 லட்சம் ஏக்கர் நிலங்களுக்குப் பாசனம் செய்திட ஆந்திராவிற்கு ஒதுக்கப்பட்ட நீரைவிடக் கூடுதலாக எடுத்துக்கொள்வார்கள்.திறந்த கால்வாய் நீரை சட்டத்திற்குப்

புறம்பாக நீரிறைப்பிகள் மூலம் இரவு நேரங்களில் கடத்தும் வேலைகள் நடக்கும். எனவே தமிழ்நாட்டிற்கு உரிய பங்காகிய 83 டிஎம்சி அளவு நீர் நிச்சயமாக வராது. (இப்போது ஆந்திராவின் கண்டலேறு - கிருஷ்ணா கால்வாயில் கண்டலேறு அணையிலிருந்து 2000 கன அடி விநாடி நீரைத் திறந்துவிட்டால் தமிழ்நாட்டு எல்லையில் (பூண்டி) 700 அல்லது 800 கன அடி ஃவிநாடி அளவே வருகிறது என்பது இங்கே சுட்டிக் காட்டப்படுகிறது).

மகாநதியின் துணைநதியான இந்திராவதி ஆற்றின் மிகை நீர் இன்னும் மிகச் சரியாக இறுதி செய்யப்படவில்லை. ஆனால் NWDA அறிக்கை அந்த அளவை 760 டிஎம்சியாகக் கணக்கில் கொண்டு 247 டிஎம்சி தண்ணீரை எளிதாகத் திருப்பலாம் என மதிப்பிட்டுள்ளது. எனினும் ஒடிசா அரசு இத்திட்டத்திற்கு இந்நாள் வரை ஒப்புதலளிக்கவில்லை.

**<u>தெலங்கானா அரசுக்கு திருப்தியில்லை</u>**

அதைப்போல தெலங்கானா அரசு அண்மைக்காலங்களில் பெரும் நீர்ப்பாசனத் திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்தி வருகிறது. கோதாவரி நதியிலிருந்து 195 டிஎம்சி நீரை இறைப்பிகள் மூலம் மேலேற்றும் (ரூ.1.20 லட்சம் கோடி செலவில்) காளேஸ்வரம் நீரேற்றும் திட்டம் 2016-2019 இல் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே எதிர்காலத்தேவை கருதித் தெலங்கானா அரசும் இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்காமல் காலம் கடத்திவருகிறது.

இத்திட்டத்தின் தோராய மதிப்பீட்டுத்தொகை ரூ.97,200 கோடி (5 ஆண்டுகளில் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது) ஆனால் உண்மையில் நிறைவேற்றிட (நிலம் கையகப்படுத்தல், சுரங்கங்கள் அமைத்தல் முதலியவற்றுக்கு 10 ஆண்டுகளுக்கு மேலாகும். திட்டமதிப்பும் ரூ.1,45,800 கோடியாக உயரும். இதில் தமிழ்நாட்டின் பங்காக ரூ.48,600 கோடி அளவுக்கு இருக்கும். இதுவன்றிக் கால்வாய் செயற்படுத்தல் மற்றும் பராமரிப்புச் செலவு என ஆண்டுக்கு ரூ.500 கோடிக்கு மேல் ஆகும்.

**<u>சூழல் பாதிப்பு, மக்கள் வெளியேற்றம்</u>**

இம் மாபெரும் அளவு தண்ணீரைத் திருப்புவதால் சுற்றுச் சூழல் பெரிதும் பாதிக்கப்படுமென்று சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்துவருகின்றனர். 29,800 ஹெக்டேர் (பட்டா நிலம் 22,483 10 வனநிலம் 2775 10 அரசு புறம் போக்கு 4622 ஹெக்டேர்) நிலத்தைக் கையகப்படுத்துவதால் பல்லாயிரக்கணக்கில் அந்நிலங்களில் வாழும் மக்களைப் புலம் பெயர்த்து புதிய குடியிருப்புகளுக்கு மாற்றுவதற்குப் பெரும் எதிர்ப்பு எழும். காட்டுயிர்களுக்கும் பாதகம் ஏற்படுமென்று தெரிவிக்கின்றனர். எனவே திட்டச் செயலாக்கக் காலம் 10 ஆண்டுகளுக்கு மேலாகக் கூட ஆகலாம்.

**<u>48,600 கோடி செலவு தேவையா? மாற்று என்ன?</u>**

இத்திட்டத்தால் தமிழ்நாட்டிற்குக் கூடுதலாகக் கிடைக்கவிருக்கும் தண்ணீரின் அளவு 83 டிஎம்சி தான்! அதுவும் காவிரிக்கு வரும்போது 48 டிஎம்சி மட்டுமே. இந்தக் குறைவான அளவு நீரைப்பெற தமிழ்நாடு அரசு ஏன் ரூ.48,600 கோடிப் பணத்தைச் செலவழிக்க வேண்டும்?

2001 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு நியமித்த டி.எஸ்.விஜயராகவன் வல்லுநர்குழு, தமிழ்நாட்டு ஆறுகளிலிருந்து 4 ஆண்டுகளுக்கொரு முறை 259.76 டிஎம்சி அளவுக்கு மிகை வெள்ளநீர் கிடைக்கிறது . இது பயன்படுத்தப்படாமல் கடலில் கலக்கிறது. இதில் 200 டிஎம்சி யை 10000 பெரிய ஏரிகளைத் தூர்வாரி 1 மீட்டர் ஆழப்படுத்தினால் கூடுதலாக 150 டிஎம்சி தண்ணீரைச் சேமித்து வைக்கலாம்.

இவ்வாறே பெரிய அணைக்கட்டுகள் , நீர்த்தேக்கங்கள் - 25க்கு மேற்பட்டவைகளில் பல ஆண்டுகளாகப் படிந்துள்ள வண்டல் மண்ணை அகற்றி - மேலும் 1.00 மீட்டர் ஆழப்படுத்தினால் குறைந்தது 50 டிஎம்சி தண்ணீரைக் கூடுதலாகத் தேக்கி வைக்கமுடியும். தமிழ்நாடு அரசு வரும் ஆண்டுகளில் 1000 தடுப்பணைகள் கட்டிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்துடன் பெரிய ஆறுகளின் குறுக்கே தடுப்பணைகள், தரைகீழ்த் தடுப்பணைகள் மற்றும் நீர்மின் உற்பத்திக்குக் கதவணைகள்முதலியவற்றில் 50 டிஎம்சி தண்ணீரைச் சேர்த்து வைக்கலாம். மழைநீர் சேகரிப்புத் திட்டங்களை முறையாக நிறைவேற்றினால் மொத்தமாக 250 டிஎம்சி தண்ணீர் நம் பயன்பாட்டுக்கு எளிதாக இரண்டு மூன்று ஆண்டுகளில் கிடைக்கும். ஆகும் திட்ட மதிப்பீட்டுச் செலவு எல்லா வேலைகளுக்கும் சேர்த்து ரூ.25,000 கோடிக்குமேல் ஆகாது.

**தமிழக அணுகுமுறையில் உடனடி மற்றம் வேண்டும்.**

தமிழக அரசு தாம் நிறைவேற்றும் பாசனத்திட்டங்களில் - பழைய திறனற்ற - செலவு அதிகம் பிடிக்கும் திட்ட அணுகு முறையினை முற்றிலும் கைவிட்டு; இன்றைய மேம்பட்ட கட்டுமானப் பொருள்களையும்,நவீன முன்னேற்றமுடைய தொழில் நுட்ப முறைகளையும் கடைபிடிக்க முன்வர வேண்டும். மேம்பட்ட தொழில் நுட்பங்களைக் கடைபிடிப்பதால் திட்டச் செலவுகளைப் பாதியாகக் (50%) குறைத்திட முடியும். நாம் அண்டை மாநிலங்களிலிருந்து நீரை உரிய காலத்தில் பெறுவதற்குப் பல தொல்லைகளைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. எனவே, தமிழக அரசின் அணுகுமுறையில் உடனடியாக மாற்றம் வேண்டும்.

**தன்னிறைவுத் தமிழகம்**

ஆகவே , அண்டை மாநில நீரையே முற்றிலும் நம்பியிருக்காமல் அவற்றின் தண்ணீருக்காக ஆண்டுக்கணக்கில் காத்திராமல் - தமிழ்நாட்டு நீர்வளங்களை முழுமையாகப் பயன்படுத்தத்தக்க வகையில் நவீன மேம்பட்ட தொழில் நுட்பங்களைக் கைக்கொள்ள வேண்டும். இதற்கென மற்ற மாநிலங்களைப் போல மெகா திட்டங்களைத் தீட்டி விரைவாகச் செயற்படுத்துதலே சிறந்த வழி. இதன்வாயிலாகத் தண்ணீர் தன்னிறைவுத் தமிழகத்தைச் சாத்தியமாக்கலாம்;. அவ்வகையில் கட்டுமானப் பொறியாளரும் தமிழ்நாடு பொதுப்பணித்துறை மூத்த பொறியாளர் சங்கமும் தேவையான கருத்துரைகளை அளித்திட நாளும் அணியமாய் உள்ளன என்று உறுதியுடன் உரைக்கிறோம். தமிழ்நாடு அரசு அவற்றைப் பயன்படுத்திக்கொள்ள முன்வருவார்கள் என்று நம்புகிறோம்.



**கட்டுரையாளர்; பொறிஞர்,முனைவர் அ.வீரப்பன்**
**அலைபேசி : 94444 04774**
**மின்னஞ்சல் : tanseapwd@gmail.com**

# பிட்காயின் (*Bitcoin*) எச்சரிக்கைகள்

**பிட்காயின்** (*Bitcoin*) (எண்ணிம நாணயக் குறியீடு: BTC; ฿) அல்லது **நுண்காசு** என்பது சத்தோசி நகமோட்டோவால் உருவாக்கப்பட்ட ஒரு எண்ணிம நாணயம் ஆகும். இது கணினி முறையால் வலைத்தளங்களில் செயலாக்கப்பட்டு, பரிமாற்றம் செய்யப்படுகின்றது. இப்பயன்பாட்டுக்காக அவர் உருவாக்கிய திறந்த மூல மென்பொருளும் (open-source software) இதே பெயராலேயே அழைக்கப்படுகிறது. பிட்காயின் என்பது தொடரேடு (அல்லது கட்டச்சங்கிலி - blockchain) என்று அழைக்கப் படும் ஒரு வகை கணினி தொழில் நுட்ப முறையில் இயங்குகிறது. பிட்காயினை (பொது வழக்கில் உள்ள டாலர், ரூபாய் போல) வலைத்தளங்களில் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளலாம்; பொருள்கள் வாங்கலாம்; மற்றும் சேமித்து வைக்கலாம். பொது வழக்கில் உள்ள பணம் ஒரு மைய வங்கியால் (Central Bank) கட்டுப்படுத்தப்பட்டு மேலாண்மை செய்யப் படுகின்றது. ஆனால், பிட்காயின் என்ற இந்த கணினிக் காசு எந்த வங்கியாலும் மேற்பார்வை இடப் படுவது இல்லை; கட்டுப் படுத்தப்படுவதும் இல்லை. மாறாக, கட்டச்சங்கிலி (blockchain) என்ற மென்பொருளால் ஆன வரவுப் பதிவேட்டில் (ledger) சேமிக்கப் பட்டு, பாதுகாக்கப் படுகின்றது. கட்டச்சங்கிலி என்பது ஒரு மென்பொருளால் ஆன வரவு-செலவு கணக்குப் புத்தகம். இது **இணையர் வலையம்** (P2P network) என்ற கணினி வலையத்தில் (computer network) செயற்படுத்தப் பட்டு, அதில் உள்ள பல இணையர்களால் மேற்பார்வை இடப்பட்டு, இயங்கும் மென் பொருளாகும்.

### பிட்காயினை வணிகர்கள் ஏற்றுக் கொள்வதில் சிக்கல் (Acceptance by merchants)

பெரும்பாலான பிட்காயின் பரிமாற்றங்கள் மக்களிடையே நடைபெறுவதில்லை; வணிகரிடம், கடைகளில் நடை பெறுவதில்லை. மாறாக, அவை குறியீட்டு நாணயச் சந்தைகளிலேயே (cryptocurrency exchange) நடை பெறுகின்றன. கட்டச்சங்கிலியில் (blockchain) பரிமாற்றம் குறைந்தது பத்து நிமிடங்களாவது எடுப்பதால், கடைகளில் இதைப் பயன் படுத்துவது மிகவும் கடினமாகிறது. விலைகளைக் குறிக்கும் போதும் பிட்காயினில் சொல்லப்படுவதில்லை. பிட்காயினில் இருந்து ஏனைய நாணயங்களுக்கு ஒரு முறை அல்லது இரண்டு முறை மற்ற வேண்டி இருக்கின்றது. பிட்காயினை ஏற்றுக் கொள்ளாத கடைகளில் பிட்காயின் வேறு நாணயங்களுக்கு மாற்றப் பட்டு பரிமாற்றங்கள் நடைபெறுகின்றன. 2017-2018-இல் இருந்த 500 இணையதள முன்னணி வணிகர்களில் 3 பேர்கள் தாம் பிட்காயினை ஏற்றுக் கொண்டனர். 2016- இல் இதுவே 5 பேர்களாக இருந்தது. இச் சரிவுக்குக் காரணம் பரிமாற்றக் கட்டண உயர்வு, அதற்கான அளவுக்கு மீறிய நேரம் ஆகியனவாகக் கருதப் பட்டன.

### சட்டத் தகுதி நிலை, வரி, நெறி முறை (Legal status, tax and regulation)

1. சட்டப்படி முழுக்க பயன்படுத்தலாம்.
2. ஒருசில கட்டுப்பாடோடு பயன்படுத்தலாம்
3. பயன்படுத்தலாம்; ஒருசில சட்டச் சிக்கல்கள் உள்ளன.
4. முழுக்க அல்லது கொஞ்சம் தடை செய்யப் பட்டுள்ளது.

பிட்காயின் பரவலாக்க முறையில் செயல் படுத்தப் பட்டிருப்பதாலும், அதன் இணையத்தள பணமாற்றக் கூடங்கள் பல்வேறு நாடுகளிலும் இருப்பதாலும், இந்த நாணயத்தை நெறி படுத்துவது மிகவும் கடினமாக உள்ளது. இதன் சட்ட தகுதி நிலை நாட்டுக்கு நாடு மாறு படுகின்றது. மற்ற குறியீட்டு நாணயங்களிலும் இது போன்ற சிக்கல்கள் உள்ளன.[125] அமெரிக்கக் காங்கிரசு நூலகம் (Library of Congress) கூற்றுப்படி, பிட்காயின் உலகில் கீழ்க் கண்ட நாடுகளில் தடை செய்யப் பட்டுள்ளது: அல்ஜீரியா (Algeria), பொலீவியா (Bolivia), எக்வடோர் (Ecuador), பங்களாதேஷ் (Bangladesh), நேபாளம் (Nepal), மாசிடோனியா (Macedonia) , எகிப்து (Egypt), ஈராக் (Iraq), மொராக்கோ (Morocco), பாகிஸ்தான் (Pakistan) ஆகியன. மற்றபடி, இந்தியா, அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா போன்ற 65-க்கும் மேலான நாடுகள் பிட்காயினை ஏற்றுக் கொண்டுள்ளன.

### சட்ட நெறி எச்சரிக்கைகள் (Regulatory warnings)

**அமெரிக்க வணிகக் குழுமம்** (U.S. Commodity Futures Trading Commission) குறியீட்டு நாணயங்களின் பயன்பாட்டைப் பற்றி கீழ்க் கண்ட கருத்துக்களை வழங்கி இருக்கிறது.

1. இந்த நாணயங்களின் பணமாற்றக் கூடங்களை (exchanges) அரசாங்கம் கண்காணிப்பதோ அல்லது மேற்பார்வை இடுவதோ இல்லை.
2. நுகர்வோர் பாதுகாப்பு கிடையாது.
3. விலை பேரளவில் மேலும் கீழுமாகப் போகலாம்.
4. இதில் பணச் சந்தை கையாளப் படலாம்.
5. பணமாற்றக் கூடங்கள் தாங்களே தங்கள் செயற்பாடுகளைப் பார்த்துக் கொள்கின்றன.

இவ்வகைக் காரணங்களால், அரசாங்கங்கள் பிட்காயினைப் பற்றி எந்த வகை உறுதியும் கொடுக்கவியலாத நிலையில் உள்ளன.

***பிட்காயின் என்பது ஒரு "குமிழ்" என்ற குற்றச்சாட்டு (bubble)***

பிட்காயின் என்பது பணப் பரிமாற்றத்தில் ஒரு வெறும் "குமிழ்" மட்டுமே என்று பல நோபல் பரிசு பெற்ற பொருளியல் அறிஞர்கள், எடுத்துக் காட்டாக இராபர்ட் சில்லர் (Robert Shiller), ஜோசப் ஸ்டிக்லிட்ஸ் (Joseph Stiglitz), ரிச்சர்ட் தேலர் (Richard Thaler) ஆகியோர், கூறி உள்ளனர். குறிப்பாக, பொருளாதார பேரறிஞரான பால் கிரக்மன் (Paul Krugman) பிட்காயின் என்பது ஒரு "குமிழ்" மட்டுமல்ல, இது ஒரு ஏமாற்று வேலை என்று கூறியுள்ளார்.[146] பொருளாதார அறிஞரான நௌரியல் ரூபினி (Nouriel Roubini) பிட்காயினை "குமிழ்களுக்கெல்லாம் தாய்" என்று சாடியுள்ளார்.

**<u>பிட்காயின் மீது கருத்துரை (Criticism)[</u>**

**பிட்காயினைப் பற்றி பல குறைகள் கூறப் படுகின்றன:**

1. அதன் விலை நிலைத்து நிற்பதில்லை.
2. மிகுதியான மின்சாரம் செலவாகிறது.
3. பரிமாற்றக் கட்டணங்கள் மிகுதியாக இருக்கின்றன.
4. போதிய பாதுகாப்பு இல்லாமல் இருக்கின்றது.
5. கவை (fork) உருவாவதனாலும், சுரங்கமர்கள் (miners) தாக்கத்தினாலும் பிட்காயின் மதிப்பிழக்கலாம்.

---

## நேர்மையாளர்களின் வாழ்வில் சில சம்பவங்கள்

### <u>ஆடம்பரம் வேண்டாம்</u>

அறிஞர் அண்ணா தமிழக முதல்வராக பதவியேற்றபின் முதன் முறையாகத் தனது சொந்த ஊரான காஞ்சிபுரத்துக்கு வந்தார். அவருடன் சில அரசு அதிகாரிகளும் வந்திருந்தினர். வீட்டில் அவர்கள் அனைவருக்கும் தண்ணீர் கொடுக்குமாறு கூறினார்.

அனைவருக்கும் குளிர் சாதனப்பெட்டி (FRIDGE) யிலிருந்து ஐஸ் தண்ணீர் வழங்கப்பட்டது. அண்ணாவுக்கு அதிர்ச்சி. வீட்டின் உள் அறைக்கு சென்று பார்த்தார். அங்கே புதிய ஃப்ரிட்ஜ் ஒன்று இருந்தது. " இது எப்படி இங்கே வந்தது ? என்று அண்ணா கேட்டார்.

ஓர் உறவினர், " நீங்கள் பெரிய பதவிக்கு வந்து விட்டீர்கள் .உங்களோடு பல அதிகாரிகள் இங்கே வருவார்கள் . அவர்களுக்கு ஐஸ் வட்டர் தந்து உபசரிக்க வேண்டாமா? அதனால் தான் வாங்கினோம்!" என்றார். அண்ணாவுக்கு கோபம் வந்து விட்டது.

"உபசரிப்பு என்பது முடியாத ஒன்றை செய்து மகிழ்விப்பதல்ல. நம்மிடம் இருப்பதைக் கொடுப்பது தான் உண்மையான உபசரிப்பு. இனிமேல் ஆடம்பரமான பொருட்கள் இங்கே இருக்கக் கூடாது", என்றார்.

# சபாஷ் அதிரடி

## மாமூல் ரேட்டை போட்டு உடைத்தார் சேலம் எஸ்பி

### சுற்றறிக்கை மூலம் போலீசாருக்கு எச்சரிக்கை

சேலம், அக். 17-

சட்டம் ஒழுங்கை பாதுகாக்கும் வகையில், தமிழகம் முழுவதும் பல்வேறு குற்ற வழக்குகளில் தேடப்பட்டு வந்த 2 ஆயிரத்துக்கும் அதிகமான ரவுடிகளை கடந்த மாதம் போலீசார் கைது செய்தனர். குற்றவாளிகளை கைது செய்வதுடன், போலீசார் மற்றும் குற்றவாளிகள் இடையேயான தொடர்புகள் தொடர்பாகவும் விசாரிக்க உயர் அதிகாரிகள் உத்தரவிட்டனர்.

இதன்படி, சென்னை டிஜிபி அலுவலகத்தில் இருந்து, தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்ட எஸ்பி அலுவலகங்களுக்கும் ஒரு பொதுவான சுற்றறிக்கை அனுப்பப்பட்டது. இதில், சட்டம் ஒழுங்கை பாதுகாக்கும் பணியில் உள்ள போலீசார், தங்கள் பணியில் நேர்மையுடன், உண்மையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.



சேலம் எஸ்பி ஸ்ரீஅபிநவ்

இந்நிலையில், சேலம் எஸ்பி ஸ்ரீஅபினவ், தன் மாவட்டத்தில் உள்ள போலீஸ் ஸ்டேஷன்களுக்கு அதிரடியான சுற்றறிக்கையை அனுப்பியுள்ளார். அதில், ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும் பணியில் உள்ள எழுத்தர் தொடங்கி இன்ஸ்பெக்டர் வரை உள்ளவர்கள், சட்ட விரோத செயல்களுக்கு எவ்வளவு லஞ்சம் பெறுகின்றனர், எந்த அனுமதிக்கு எவ்வளவு பணம் வாங்குகிறார்கள் என்று 61 வகையான குற்றங்கள் தொடர்பான பட்டியலை இணைத்துள்ளார்.

குறிப்பாக டிரைவிங் லைசென்ஸ், பாஸ்போர்ட் என்ஓசி சான்றிதழ் வழங்குவதற்கு எழுத்தருக்கு 100 ரூபாய் முதல் ஆயிரம் ரூபாய் வரை வாங்குவதாக குறிப்பிட்டுள்ளார். அதேபோல் லாட்டரி விற்பனை, சந்துக்கடை மதுபான விற்பனை, மணல் கடத்தல், விபச்சாரம், சூதாட்டம் உட்பட சட்டவிரோத செயல்களில் ஈடுபடுவோர் மீது நடவடிக்கை எடுக்காமல், அவர்களிடம் இருந்து 5 ஆயிரம் ரூபாய் முதல் 20 ஆயிரம் ரூபாய் வரையிலும் எஸ்ஐக்கள் வாங்குவதாக அந்த சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இன்ஸ்பெக்டர் தனது அதிகாரத்துக்கு ஏற்ப, லாட்டரி விற்பனை, மசாஜ் சென்ட்டர் நடத்திக்கொள்ள, மணல் கடத்தல், கிரானைட் கற்கள் கடத்தல், துப்பாக்கி உரிமம் வழங்குதல், நிலப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு உட்பட பல செயல்களுக்கு 10 ஆயிரம் முதல் ஒரு லட்சம் ரூபாய் வரை வாங்குவதாக குறிப்பிட்டுள்ளார். அதேபோல் சிறப்பு பிரிவு போலீசார், 500 ரூபாய் முதல் ஆயிரம் ரூபாய் வரையிலும், ரோந்து போலீசார் 100 ரூபாய் முதல் 500 ரூபாய் வரையிலும் வசூலிக்கின்றனர் என்று தெரிவித்துள்ளார்.

போலீஸ் ஸ்டேஷன்களுக்கு எஸ்பி ஸ்ரீ அபிநவ் அனுப்பியுள்ள சுற்றறிக்கை, போலீசாரை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. தொடர்ந்து இதுபோன்று பணம் வசூல் நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்துள்ளார்.

ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷன்களிலும், கிட்டத்தட்ட 61 வகையான குற்றங்கள் நடப்பதாகவும், அதற்கான லஞ்ச விவரங்களும் தெரிவிக்கப்பட்டுள்ளது அதிர்ச்சியாக உள்ளது. ஒரு எஸ்பிக்கே தெரிந்து, இவ்வளவு விஷயங்கள் நடக்கிறது என்பது வருத்தமான விஷயம். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதுபோல், சேலம் மாவட்டம் ஒரு சிறிய உதாரணம்தான். இதேபோல், தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும், காவல் துறையில் நடக்கும் லஞ்ச பட்டியல் வெளியிடுவதோடு, காவல் துறையில் உள்ள கறுப்பு ஆடுகளையும் களையெடுக்க எஸ்பிக்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

## நர்சரி பள்ளிகள் திறப்பு முடிவில் குளறுபடி 'தெளிவான' அறிக்கை இன்று வருமாம்

திருவெறும்பூர், அக். 17– தரப்படும். ... வகுப்புகள் நடத்தப்படுகிறது. அதனை இன்னும்



தினமலர் திருச்சி திங்கள் அக்டோபர் 18, 2021 நாலாம் பக்கம்

# இழப்பு 2 ஆயிரத்து 500 கோடி... லஞ்சம் ரூ.300 கோடி

## நெல் கொள்முதல் நிலையங்களின் அதிர வைக்கும் மறுபக்கம்

**டெல்டாவில் இருந்து வேதனை ரிப்போர்ட்**

'உழவன் கணக்கு பார்த்தால் உழக்கு கூட மிஞ்சாது' என்பது பழமொழி. அதையும் மீறி இயற்கை ஒத்துழைத்து சாகுபடி கை கொடுத்தாலும், விளைந்த நெல்லை விற்று முதல் ஆக்குவதற்குள் டெல்டா விவசாயிகள் படாத பாடுபட வேண்டியுள்ளது. குறிப்பாக, நெல் கொள் முதல் நிலையங்களில் அவர்கள் படுகிற கஷ்டங்களை, நெருக்கடிகளை வார்த்தைகளால் சொல்ல முடியாது. அவ்வளவு துயரம்.

### ஆரம்பமே அலைக்கழிப்பு

தஞ்சை, நாகை, திருவாரூர், மயிலாடுதுறை உட்பட டெல்டா மாவட்டங்களில், 4.31 லட்சம் ஏக்கரில் குறுவை நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. வடகிழக்கு பருவமழை தொடங்க உள்ள சூழலில் அறுவடைப் பணிகள் மும்முரமாக நடந்துவருகிறது. இந்நிலையில் புதிதாக பொறுப்பேற்ற திமுக அரசுநெல் கொள்முதல் நிலையம் தொடர்பாக ஆன்லைன் பதிவுக்கு பிறகான விற்பனை உள்ளிட்ட பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்தது. இதில் கொதித்தெழுந்த விவசாயிகள் தங்களது கண்டனங்களை வெளியிடவே அரசு தனது அறிவிப்பை ஒவ்வொன்றாக வாபஸ் பெற்றது. இறுதியாக வழக்கமான டோக்கன் நடைமுறையேதொடரும் என்று அரசு அறிவித்தது.

### ஈரப்பதம் சர்ச்சை

நெல்லில் 17 சதவீதம் அளவு ஈரப்பதம் இருந்தால் மட்டுமே அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் கொள்முதல் செய்யப்படும். ஆனால் டெல்டா மாவட்டங்களின் பருவச்சூழலில் 22 சதவீதம் முதல் 25 சதவீதம் வரை ஈரப்பதம் இருப்பதால் நெல்லை காய வைக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இதனால் விவசாயிகள் பெரும் சிரமத்தை சந்திக்கின்றனர். மத்திய உணவுத்துறைக்கு கடிதம் எழுதியுள்ள தமிழக நுகர் பொருள் வாணிபக் கழகம் நெல் ஈரப்பதம் அளவை 20 சதவீதமாக உயர்த்த வேண்டும் என கேட்டுக்கொண்டது. தமிழக உணவுத்துறை அமைச்சர் சக்கரபாணி, டில்லி சென்று மத்திய உணவுத்துறை அமைச்சர் பியூஷ்கோயலிடம், "ஈரப்பதத்தை 20 சதவீதமாக உயர்த்துங்கள்" என்று கேட்டார். ஆனால் தமிழகத்தில் தொடர்மழை காரணமாக 20 சதவீதம் மிகக் குறைவான அளவு 25 சதவீதம் வேண்டும் என்று கோரிக்கை வைக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

### வசதிகள் கிடையாது

விவசாயிகள் நெல் ஈரப்பத பிரச்னையால் ஆண்டுதோறும் அல்லாடி வந்தாலும் அது குறித்து அரசுகள் உரிய கவனம் செலுத்துவதே இல்லை. நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் சிமென்ட் உலர் தளம் இருந்தால், நெல்லை உலர்த்தி ஈரப்பதத்தை குறைக்க வசதி யாக இருக்கும். ஆனால் உலர்தளம் இல்லாததால், சாலையில் நெல்லை கொட்டி உலர்த்த வேண்டியதிருக்கிறது. இதையறிந்த அரசு முக்கியமான கொள்முதல் நிலையங்களில் நெல்லை உலர்த்தும் உலர் இயந்திரம்



பாடுபட்டு விளைவித்து, கனமழையில் இருந்து காப்பாற்றினாலும் கடைசியில் எப்படி கொள்முதலுக்கு அனுப்ப போகிறோமோ என்ற கவலையுடன் நெல்லை உலர வைக்கும் பணியில் விவசாயிகள். (இடம்:) தஞ்சை அருகே குருங்கோட்டை.

தருவித்துள்ளது. ஆனால் தாலுகாவுக்கு குறைந்த பட்சம் ஒரு உலர் இயந்திரம் தேவை என்று விவசாயிகள் குரல் எழுப்புகின்றனர். மேலும் போதிய அளவு தார்ப்பாய் இல்லாததால் மழையில் நனைந்து நெல் வீணாகிறது. இதற்கு பதில் வந்த விலைக்கு வியாபாரிகளிடம் குறைந்தபட்சம் ரூ.2 ஆயிரத்து 500 கோடி செலவிட வேண்டியுள்ளது.

### ரூ.300 கோடி லஞ்சம்?

தமிழகத்தில் நுகர்பொருள் வாணிப கழகத்தால் 843 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்படுத்தப்பட்டு

### கொள்முதல் முறையில் மாற்றம்

நெல்கொள்முதல் நிலையங்களில் நடக்கும் முறைகேடுகளை தவிர்க்க பஞ்சாப், அரியானா போன்ற மாநிலங்களில் உள்ளது போல் கொள்முதல் முறையில் மாற்றம் கொண்டுவர வேண்டும். அறுவடை களத்துக்கு 2 இயந்திரங்கள் கொண்டுவரப்பட்டு ஒன்றில் நெல் மணிகள் உறிஞ்சப்பட்டு உள்ளேயே 6 மணி நேரம் ஊறவைத்து காயவைக்கப்பட்டு அடுத்த இயந்திரம் வாயிலாக அரிசியாக அரவை நெல் வீதம் நாள் ஒன்றுக்கு 15 முதல் 30 டன் வரைநெல் அரிசியாக மாற்றப்படுகிறது. இந்த அரிசி மூட்டைகள் நேரடியாக தாலுகா அளவிலான குடோன்களுக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து அங்காடிகளுக்கு கொண்டு சென்று விநியோகிக்க முடியும். இதனால் 6 முறை ஏற்றுக்கூலி, இறக்கு கூலி கொடுப்பது, லாரி வாடகை ஆகியவற்றை மிச்சப்படுத்த முடியும். இதனால் அரசுக்கு ரூ.2 ஆயிரத்து 500

### விவசாயிகளின் கோரிக்கை

இந்த புதிய நடைமுறை ஒத்து வராது என்று அரசு நினைத்தால் மொபைல் கொள்முதல் நிலையங்களை அதிகப்படுத்துவதுடன், டெல்டா மாவட்டங்களில் அரவை மில்களை அதிகப்படுத்த வேண்டும். விவசாயிகளிடமிருந்து அரசே மொபைல் நிலையங்கள் மூலமாக கொள்முதல் செய்து அந்த மூட்டைகளை நேரடியாக அரவை மில்களுக்கு அனுப்பி குறைந்தபட்சம் 5 முறை ஏற்றுக்கூலி, இறக்கு கூலி, லாரி வாடகை கொடுப்பதை தவிர்க்கலாம். விவசாயிகளுக்கு கொள்முதல் நிலையத்தில் மூட்டைக்கு ரூ.40 மாமூல், கூடுதல் எடை வைப்பது, தூற்றுவதில் ஆகும் செலவு உள்ளிட்டவைகளை குறைக்க முடியும். இதனால் குறைந்தபட்சம் ரூ.2 ஆயிரம் கோடி செலவை அரசு குறைக்கலாம். விவசாயிகளும் தங்களின் இழப்பை தவிர்க்க முடியும். இந்த இரண்டில் ஏதாவது ஒரு நடைமுறையை அரசு செயல்படுத்தலாம் என்பதும் விவசாயிகளின் கோரிக்கை.

இதன்படி கணக்கு போட்டால் லஞ்ச பணம் மட்டும் ரூ.300 கோடியை தாண்டுகிறது. அதாவது லஞ்சம் காரணமாக விவசாயிகளுக்கு ரூ.300 கோடி இழப்பு. இதை தடுக்க வேண்டும். வீண் செலவுகளை குறைக்க வேண்டும் என்பது ஒட்டு மொத்த டெல்டா விவசாயிகளின் கோபக்குரல்.

### மாற்றமே முறைகேடுகளை தடுக்கும்

இந்த பிரச்னைகள் குறித்து தமிழ்நாடு அனைத்து விவசாயிகள் சங்கங்களின் கூட்டுக்குழு தலைவர் தனபாலன் கூறியது: அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் ஒவ்வொரு கட்டத்திலும் முறைகேடுகள் என்பது ...கொண்டேதான் வருகிறது

ஐப்பசி 1



## இந்தியாவின் 2-வது பணக்காரர் ஆனார்

# அதானியின் ஒரு நாள் வருமானம் ரூ.1,000 கோடி



■ மும்பை

கடந்த ஆண்டில் அதானி நாளொன்றுக்கு ரூ.1,000 கோடி வருமானம் ஈட்டியுள்ளார் என்று ஐஐஎஃப்எல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஐஐஎஃப்எல் நிறுவனம் 2021-ம் ஆண்டுக்கான இந்திய கோடீஸ்வரர்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது. அதில் ரூ.7.18 லட்சம் கோடி சொத்து மதிப்புடன் தொடர்ந்து பத்தாவது ஆண்டாக முகேஷ் அம்பானி குடும்பம் முதல் இடம் பிடித்துள்ளது. சென்ற ஆண்டில் நாளொன்றுக்கு முகேஷ் அம்பானி மற்றும் அவரது குடும்பம் ரூ.163 கோடி அளவில் வருமானம் ஈட்டியுள்ளது.

கவுதம் அதானி குடும்பம் ரூ.5.05 லட்சம் கோடி சொத்து மதிப்புடன் 2-ம் இடம் பிடித்துள்ளது. நாளொன்றுக்கு ரூ.1,000 கோடி அளவில் அளவில் அவருடைய குடும்பம் வருமானம் ஈட்டியுள்ளது.

அதற்கு முந்தைய ஆண்டில் ரூ.1.40 லட்சம் கோடி சொத்து மதிப்பைக்கொண்டு இந்தியக் கோடீஸ்வரர்களின் பட்டியலில் நான்காவது இடத்தில் அதானி இருந்தார்.

இந்நிலையில் அவருடைய சொத்து மதிப்பு ரூ.5.05 லட்சம் கோடியாக உயர்ந்து 2-ம் இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

மூன்றாவது இடத்தில் சிவ் நாடார் குடும்பம் உள்ளது. சென்ற ஆண்டில் சிவ் நாடார் குடும்பத்தின் சொத்து மதிப்பு 67 சதவீதம் உயர்ந்து ரூ.2.36 லட்சம் கோடியாக உள்ளது. நாளொன்றுக்கு ரூ.260 கோடி அளவில் வருமானம் ஈட்டியுள்ளனர்.

எஸ் பி இந்துஜா குடும்பம் 4-வது இடத்தில் உள்ளது. அவர்களது வருமானம் சென்ற ஆண்டு நாளொன்றுக்கு ரூ.209 கோடியாக இருந்துள்ளது. அவர்களது சொத்து மதிப்பு 53% அதிகரித்து ரூ.2.20 லட்சம் கோடியாக உள்ளது.

5-வது இடம் பிடித்துள்ள எல் என் மிட்டல் குடும்பம், சென்ற ஆண்டில் நாளொன்றுக்கு ரூ.312 கோடி வருமானம் ஈட்டியுள்ளது. அவர்களின் சொத்து மதிப்பு 187 சதவீதம் உயர்ந்து ரூ.1.7 லட்சம் கோடியாக உள்ளது.

---

### தமிழக- ஆந்திரா எல்லையிலான காட்பாடியில் வசூல் வேட்டை தீவிரம்

# டிரைவர்களிடம் லஞ்சம் வாங்கிய எஸ்எஸ்ஐ அதிரடி சஸ்பெண்ட்

## ஆர்டிஓ அலுவலக புரோக்கர் லஞ்சம் வாங்கும் வீடியோ வைரல்



**வேலூர், அக்.30:** தமிழக- ஆந்திரா எல்லையான காட்பாடியில் டிரைவர்களிடம் ஆர்டிஓ செக்போஸ்ட் புரோக்கர், எஸ்எஸ்ஐ போட்டி போட்டு லஞ்சம் வாங்கும் வீடியோ வைரல் ஆகி வருகிறது. இதையடுத்து எஸ்எஸ்ஐயை சஸ்பெண்ட் செய்து எஸ்பி செல்வகுமார் உத்தரவிட்டுள்ளார்.

வேலூர் மாவட்டம் காட்பாடி அடுத்த தமிழக- ஆந்திர எல்லையான கிறிஸ்டியான்பேட்டையில் வட்டார போக்குவரத்து சோதனைச்சாவடி மற்றும் காவல் துறை சோதனைச்சாவடி அமைந்துள்ளது. இங்கு நேற்றுமுன்தினம் மாலை இவ்வழியாக தெலங்கானாவுக்கு சேலத்தை சேர்ந்த 5 நெல் அறுக்கும் இயந்திரங்களை ஓட்டுனர்கள் ஓட்டி சென்றுள்ளனர். அப்போது காட்பாடியில் வட்டார போக்குவரத்து செக்போஸ்ட் அலுவலகத்தில் ஒரு வண்டிக்கு ₹500 ரூபாயும், காவல் துறை சோதனைச்சாவடியில் ஒரு வண்டிக்கு ₹300 ரூபாயும் லஞ்சம் வசூலிக்கும் வீடியோ தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

அந்த வீடியோவில் செக்போஸ்ட் அலுவலகத்தில் புரோக்கராக வேலை செய்யும் சேகர் என்பவர் நெல் அறுக்கும் இயந்திர ஓட்டுனர்களிடம் 5 பேரிடம் தலா ₹500 லஞ்சம் பெறுகிறார். அடுத்து சிறிது தொலைவில் உள்ள காவல் துறையை சேர்ந்த செக்போஸ்டை தாண்டி இந்த வாகனங்கள் சென்றதை பார்த்ததும் சிறப்பு உதவி ஆய்வாளர் பிரகாஷ் மொபட்டில் விரட்டிச்சென்று அந்த 5 வாகனங்களை சிறிது தூரத்தில் தடுத்து நிறுத்தினார். பின்னர் டிரைவர்களிடம் ₹300 லஞ்சமாக கேட்டுள்ளார். டிரைவர்கள் பணம் கொடுக்க மறுத்துவிட்டனர்.

அதனால் ஆத்திரமடைந்த எஸ்எஸ்ஐ, ஆர்டிஓ செக்போஸ்ட்டில் மட்டும் ₹500 கொடுத்துவிட்டு போகிறீர்கள். எங்களுக்கும் கொடுங்கள் என்று வாக்குவாதம் செய்கிறார். இந்த வீடியோ குறித்த புகார் வேலூர் எஸ்பி செல்வகுமாருக்கு சென்றது. இதையடுத்து லஞ்சம் பெற்ற சிறப்பு உதவி ஆய்வாளர் பிரகாஷை சஸ்பெண்ட் செய்து எஸ்பி செல்வகுமார் நேற்று அதிரடியாக உத்தரவிட்டார்.

தினகரன் Sat, 30 October 2021
https://epaper.dinakaran.com/c/64047305

ஆண்டு-AM/ஆயுள்-LM உறுப்பினர் எண்/No:

லஞ்சம் தவிர். நெஞ்சம் நிமிர்

**ஊழல் எதிர்ப்பு இயக்கம், சென்னை, (பதிவு எண் : 341/2001)**

**ANTI CORRUPTION MOVEMENT,CHENNAI, (REGN NO.341/2001)**

**155, கொன்னூர் நெடுஞ்சாலை, அயன்புரம், சென்னை- இந்தியா- 600023**

**Website: "anticorruptionchennai.com" மின்னஞ்சல் : acmchennai2001@yahoo.co.in**

**உறுப்பினர் சேர்க்கை படிவம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | **பெயர்**/Name | | AFFIX PHOTO/ புகைப்படம் ஒட்டவும் |
| 2. | **பிறந்த தேதி**/*Date of Birth* | | |
| 3. | **கூடுதலாக ஒரு பாஸ்போர்ட் அளவு புகைப்படம் இணைக்கப்பட்டு ள்ளதா**? Whether one more passport size photo is annexed. | | |
| 4. | **கல்வி**/Education | | |
| 5. | **தொழில்**/Profession | | |
| 6. | **முகவரி** /Address (**பின்கோடுடன்**/with Pincode | | |
| 7. | **ஆதார் எண்**/Adhar No. | | |
| 8. | **தொலைபேசி எண்**/Ph.No. | | |
| 9. | **மின்னஞ்சல் முகவரி**/ Email id | | |
| 10. | **உறுப்பினர் கட்டண செலுத்திய விபரம்**/details of payment of Membership fees | **(DD-வரைவோலை//Cheque-காசோலை/NEFT-நெ.ஃப்ட் ஏற்றுக்கொள்ளப்படும்/acceptable)** | |
| 11. | ஊழல் பற்றிய தங்கள் கருத்துக்கள்/your views on corruption | | |

**உறுதி மொழி/ OATH**

நான் என் வாழ்க்கையில்எச்சூழ்நிலையிலும் எந்த காரணம் கொண்டும் லஞ்சம் கொடுக்கவோ வங்கவோ மாட்டேன் என்றும், இந்த இயக்கத்தின் விதிமுறைகளுக்கேற்ப நடந்து கொள்வேன் என்றும், நமது நாட்டில் நிலவும் எல்லா வகை ஊழலையும் ஒழிக்க முழுமூச்சுடன் பாடுபடுவேன் என்றும். மற்றும் நான் எந்த ஒரு அரசியல் கட்சியிலும் எந்தவொரு பதவியிலும் இல்லை என்றும் உறுதி கூறுகிறேன்./ I hereby declare and swear that I will not pay/receive bribe in my life on any circumstances; I will abide by rules Aof this movement; I will work devotedly to eradicate all forms of corruption in this country and I am not holding any office in any form in any political party.

தேதி/Date

இடம்/Place விண்ணப்பதாரர் கையொப்பம்/Applicant's signature

**அலுவல் பணிக்கு மட்டும்/For Office Use Only**

| |
|---|
| உறுப்பினர் சந்தா ரூ. /- பெற்ற ரசீது ஏண். தேதி<br>Membership fees Rs. /- Receipt No. Date: |
| ஆண்டு/ ஆயுள் உறுப்பினராக அனுமதித்த செயற்குழு தீர்மாண எண். தேதி:<br>Enrolled as AM/LM Member in EC Resolution No. Dated |
| பொதுச்செயலாளர்/தலைமையக செயலர் கையொப்பம்<br>General Secretary/HQ Secretary |

ஆண்டு சந்தா/Annual Subscription- Rs. 300/- , அயுள் சந்தா/Life Subscription Rs. 2500/-

குறிப்பு/Note: வங்கி கணக்கு விபரம்/Bank Account details: IOB,, Ayanavaram Branch (IFSC Code: IOBA0000009)


**சேமிப்பு கணக்கு எண்**/ Savings A/C No: 000901000041657 . **இரு பாஸ்போர்ட் அளவு போட்டோக்கள் மற்றும் அதார் கார்டு இனைக்கப்படவேண்டும்**. Enclose two passport size photos and Aadhar card.

இலஞ்சம் தவிர்!  Date of Publication: 5th of Every Month  நெஞ்சம் நிமிர்!!

**நேர்மை நெறி- நவம்பர்-'2021**

| | |
|---|---|
| Registered with the Registrar of News Papers for India,New Delhi, Regn.No.TNBIL/2003/10419 | SSB/Chennai City North Divn Regn.No.TN/CCn/671/2018-20 |

PERMITTED TO POST WITHOUT PREPAYMENT VIDE WPP NO. TN/PMG(CCR)WPP533/2018-20




# நேர்மை நெறி

ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் **திங்களிதழ்**

**ஆசிரியர் : வே. கார்த்திகை ராஜன்**

**வெளியீட்டுச்செயலாளர் : ஜி கோவிந்தசாமி:**

Permitted to Posting 7th to 13th
Posted at Patrika Channel
(Egmore RMS/1) on 13 Nov 2021
Due to corona published online)

**புல்லிலை எருக்கம் ஆயினும் , உடையவை கடவுள் பேணோம் என்னா.**

*<u>பெறுநர்</u>*

IF UNDELIVERED, PLEASE RETURN TO

**ACM, 155, KONNUR HIGH ROAD,**
AYANAVARAM, CHENNAI-23

Owned by Anti Corruption Movement, Chennai and published through online on its behalf of Govindasamy (9841026766) from No.155, "Nambakam" Konnur High Road, Ayanavaram, and Chennai-600 023 and printed by Thiru G Parthasarathy at VPS PRINTERS, No 292, TH Road, Chennai-600005 Editor: V.Karthikai Rajan

இலஞ்சம் கொடுக்காதீர்!  இலஞ்சம் கொடுக்க விடாதீர்!!